Registered as Newspapcr in Sri Lanka.

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | பிரமோதூத ஹு சித்திரை மீ 11ஆம் வ | செவ்வாய்க்கிழமை | (24 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 27 | ஓசை 65

## இஸ்ரேல் எதிர்ப்பு இந்திய எதிர்ப்பாக மாறியது புத்தளத்தில்!

(புத்தளம்)

இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு கொழும்பில் மூடப்பட்டது தொடர்பாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு நன்றி தெரிவிக்கக் கூட்டப்பட்ட கூட்டம் திடீரென இந்திய எதிர்ப்புக் கூட்டமாக மாறிய சம்பவம் புத்தளத்தில் நடந்துள்ளது.

சென்ற வெள்ளியன்று புத்தளத்தில் பள்ளிவாசல் ஒன்றில் கூடிய இக் கூட்டத்தில் சுமார் 3,000 முஸ்லிமகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கூடியிருந்த மககள் இந்திய எதிர்ப்புச் சுலோகங்களைக் கிளப்பினார்கள் என அகில இலங்கை முஸ்லிம காங்கிரஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

''காஸ்மீரில் கைவையாதே'' காஸ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்கு''-இவ்வாறான சுலோகங்களைக் கோஷித்த (6-ஆம் பக்கம் பார்க்க)



தேனிசை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்டப் பொறுப்பாளர் பானு மக்கள் முன்னேற்றச் செயலாளர் யோகரெட்ணம் யோகி தலைவர் கோ மகேந்திரராசா ஆகியோருடன் தேனிசை செல்லப்பாவும் பின்னணிப் பாடகி சொர்ணலதாவும்

## ஹமீத் முதல் வாரத்தில் கிழக்கிற்கு விஜயம்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண சமாதானகுழுதலைவரும்நீதிஅமைச்சருமானஜனாப் ஏ சீ. எஸ். ஹமீத் அடுத்தமாத முதல் வாரம் கிழக்கு மாகாணம் வருகை தரவிருக்கிறார்.

ஸ்ரீலங்கா அரசு – தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தை விவகாரத்தில் முஸ்லிம்களின் கருத்துக்களை திரட்டும் பணியில் அமைச்சர் ஈடுபட்டுள்ளார்.

ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் கருத்துக்களை பெற்றுள்ளார்.

அம்பாறை, திருமலை (6 ஆம் பக்கம் பார்க்க)

## தேனிசைச் செல்லப்பாவிற்கு புலிகள்சார்பில் தங்கப்பதக்கம்

(யாழ்ப்பாணம்)

இசைக்கலைஞர் தேனிசைச் செல்லப்பா நேற்று முற்றவெளியில் நடந்த இசை நிகழ்ச்சியில் புலி இலச்சனை பொறிக்கப்பட்ட தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இத் தங்கப்பதக்கத்தினை விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவரும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னனியின் தலைவருமான திரு. கோ. மகேந்திரராசா தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே பிரபாகரன் சார்பில் வழங்கினார்.

விடுதலைப் புலிகளினால் கலைஞர் ஒருவர் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது இதுவே முதற் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பேரினவாதம் ஒழியவில்லை

# மனமாற்றமும் இல்லை!

## தமிழ்மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என மகேந்திரராசா எச்சரிக்கை!

## யாழ்-மட்டு தபால் துரித விநியோகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு – யாழ்ப்பாணம் தபால் விநியோகம் 24 மணி நேரத்திற்குள் உரிய விலாசத்திற்கு விநியோகம் செய்யப்படுவதற்கேற்ப மட்டக்களப்பில் யாழ். தபால்கள் தரம்பிரித்து கட்டும் நேரம் மாற்றப்பட்டுள்ளது.

இத பிரகாரம் மட்டக்களப்பில் நண்பகல் மாகோவுக்கு செல்லும் சரக்கு ரயிலில் யாழ் பாண தபால் பொதி (6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பிரதம தபாலக சிற்றூழியர் தலைமறைவு

(வவுனியா)

வவுனியா பிரதம தபாலகத்தில் வேலை செய்து வந்த சிற்றூழியர் ஒருவர் திடீரெ

வெளிநாட்டுக் கடிதங்கள், பிரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டு. அவை மீட்டது தெரிந்ததே.

சிற்றூழியர் ஒருவர் திடீரென்று தலைமறைவாகியுள்ளார்

கடந்தமாத இறுதியில்மேற்படி தபாலகத்திற்கு அருகில் இருக்கும் கிணற்றுக்குள் மன்னார் மாவட்டத்துக்குரிய தெரிந்ததே.

இது சம்பந்தமாக மேற்படி தபாலகத்தில்' தபால்திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரியால் விசாரணைகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

(6 ஆ் பக்கம் பார்க்க)

# புலிகளைப் பாடும் வாயால் இவர்களைப் பாடமாட்டேன்

(யாழ்ப்பாணம்)

எந்த ஒரு இந்திய அரசியல் கட்சியோ அல்லது தமிழ் நாட்டு அரசோ வழங்காத பெருமையும் பட்டத்தையும் கௌரவத்தையும் தமிழீழத் துத் தலைவர்களும் தமிழீழத்துப் பெருங்குடி மக்களும் வழங்கியுள்ளனர்.

ஆகவே விடுதலைப் புலிகளைப்பாடிய இந்த வாயால்

(6ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

"நாம் இதுவரை எதிர்த்துப் போராடிய சிங்கள பௌத்த பேரினவாதம் முற்றாக அழிந்து போய் விடவில்லை. அத்தோடு தெற்கில் நல்ல மனமாற்றமும் ஏற்படவில்லை ஆகவே எனதுரிமை மக்களே நீங்கள் என்றும் விழிப்பாயிருங்கள்'' என தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா யாழ்ப்பாண முற்றவெளியில் லட்சக்கணக்கான மக்கள்முன் முதல் முதலாக பேசும் போது தெரிவித்தார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசிய போது நாம் அறிந்த காலத்தில் இருந்தும் நாம் படித்த வரலாறுகள் மூலம் நாம் தெரிந்து கொண்டதெல்லாம் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழினத்தைப்பூண்டோடு ஒழிப்பதற்கு பல முயற்சிகள் செய்து வந்திருக்கின்றது என்பது தான் இது காலா காலம் வெவ்வேறு வழிமுறைகளில் தமிழ்மக்கள் மீதான தாக்குதலை கட்டவிழ்த்து விட்டிருந்தது ஆகவே

(6ஆம் பக்கம் பார்க்க)

# "மண்ணில் வாழ்ந்து மக்களை புரியட்டும்"

\- யோகி

(யாழ்ப்பாணம்)

ஒருவன் தனது மண்ணிலே வாழவேண்டும் அவனது மக்களை புரிந்துகொள்ள வேண்டும். அந்த மண்ணின் வாசம் அவனது உடலோடு ஒட்டி உறவாட வேண்டும். இவற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார வயரிங் சேவையில் பயிற்சி

(கோண்டாவில்)

தேசிய இளைஞர் சேவையன்றம் ஆர்வமுள்ள இளைஞருக்கு மின்சார வயறிங் வேலைகளை கற்றுக்கொடுக்கும் வகையில் பயிறசி நெறித்திட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

ஆறுமாத கால பயிற்சியான இத்திட்டத்தில் பயிலு

(6ஆம் பக்கம் பார்க்க)

# பல்லாண்டுகளின் பின் யாழ். முற்றவெளியில்ஜனசமுத்திரம்

## வீதிகளெங்கும் சாரிசாரியாக மக்கள் அணி

(யாழ்பாணம்)

''எல்லா வீதிகளும் ரோம் நகரை நோக்கிச் செல்லுகின்றன'' என்ற ஆங்கில முதுமொழிபோல கடந்தகால ஆண்டுகளின்பின் நேற்றுப்பிற்பகலிலிருந்தே யாழ். கோட்டை முற்றவெளி மைதானத்தை நோக்கி நடந்தும் பஸ்கள், மினிபஸ்கள், சைக்கிள், மோட்டார் சைக்கிள் லொறிகள், மாட்டு வண்டிகள், ஓட்டோக்கள் என்று கிடைத்த வாகனங்களிளெல்லாம் மக்கள் தொற்றிக்கொண்டு போய்ச் சேர்ந்தனர்.

நேற்றுப் பிற்பகலிலிருந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

# '74 ஆம் ஆண்டுச் சம்பவம் இன்று யாழ்·முற்றவெளியில் நடக்கமுடியுமா'


## தேனிசை நிகழ்ச்சியில் பானு சூளுரை

(யாழ்ப்பாணம்)

இந்த மைதானம் வரலாற்றுப் பராம்பரியம் உள்ள மைதானம் 1974 ஆம் ஆண்டு தை மாதம் 9ம் திகதி இதே போன்று ஒரு எழுச்சி நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. உங்களைப் போன்றுதான் மக்கள் கூடியிருந்தார்கள். இந்தியாவில் இருந்து வந்த இசை நிகழ்ச்சியும், சொற்பொருக் காற்றலையும் செவிமடுத்துக் கொண்டிருந்தார்கள். அச் சமயம் திட்டமிட்ட செயல் மூலம் ஒன்பது உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. கூட்டம் சிதறிக் காணப்பட்டது. இன்று சுற்றிப் பாருங்கள் அப்படி ஒரு சமயம் நடக்க முடியாது 14 வருடங்களில் நாம் பெற்ற பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடே இந்த வெற்றி என்றே கூறுவேன் என முற்றவெளியில் நிகழ்ந்த தேனிசை நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்துப் பேசிய யாழ். மாவட்ட பொறுப்பாளர் திரு. பானு தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)



நேற்று மாலை முற்றவெளியில் தேனிசை நிகழ்ச்சியில் ஜனசமுத்திரமும் அதில் உரையாற்றும் கவிஞர் காசி ஆனந்தனும்

**வரிவிளம்பரம்**

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஒடியோ றெக்கோடிங்கிற்கும், ரி. வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: NEW VENUS No: 60 Stanley Road, Jaffna.
B/538

**விற்பனைக்கு**

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M.G.M 777, K.K.S Road Jaffna (B–768)

**தவறி விட்டது**

நடராஜா கனகம்மா ஆகியவருடைய அடையாள அட்டை யாழ். ஸ்டேசனடியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து எனது அடையாள அட்டையை ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் ந. கனகம்மா No- 10–A மாட்டின் லேன் யாழ்ப்பாணம். (R-420)


## வாழ்கைச் செலவு சுட்டெண் 964.2

கடந்த மார்ச் மாதத்திற்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 964.2 என அரசாங்கம் வர்த்தமானியில் தெரிவித்துள்ளது.

## எதிர்க் கட்சிகள் மேதினக் கூட்டங்களை கூட்டாக நடாத்தமாட்டா

(கொழும்பு)

எதிர்வரும் மேதினக் கூட்டங்களில் எதிர்கட்சியினாரின் மேதினக்கூட்டம் ஒன்றாக நடக்கமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய சோசலிச முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளின் கூட்டங்கள் வெவ்வேறு இடங்களில் நடைபெறும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின மேதினக் கூட்டம் கிராண்ட் பாஸில் திருமதி ஸ்ரீமவோ தலைமையில் நடைபெறவுள்ளது

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி இரு பிரிவுகளாக இம் முறை கூட்டங்களை நடாத்தவுள்ளன.

மக்கள் ஐக்கிய முன்னணியும் தனியாக திரு. தினேஸ் குணவர்த்தனா தலைமையில் மேதினக் கூட்டத்தைநடாத்தவுள்ளது

திரு. எஸ்.டி. பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா முன்னேற்ற முன்னணியும், திரு. ருக்மன் சேன நயாக்கா தலைமையிலான ஐக்கிய இலங்கை மக்கள் கட்சியும் மேதினக் கூட்டங்களைநடாத்தப் போவதில்லை என அறிவித்துள்ளது.

## உத்தியோக பூர்வ தினக்குறிப்பு வழங்கப்படவில்லை

(களுவாஞ்சிக்குடி)

இவ்வாண்டுக்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான உத்தியோகபூர்வமான தினக்குறிப்பு நான்கு மாதங்களாகியும் இன்னும் வழங்கப்படவில்லை என இப்பகுதி அரசாங்க உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். (45)

## ஜனசக்தி மோசடி கிராமசேவகர் கைது

(கொழும்பு)

கிராமசேவையாளர் ஒருவர் தமது பிரிவில் உள்ள ஜனசக்தி பத்திரங்கள் சிலவற்றுக்கு உதவிப் பொருட்கள் வழங்கியதால் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

வெளிநாடு சென்றவர்களின் உணவு முத்திரைகள் மீளப் பெற்ற இவர் அவற்றிற்கு இந்தப் பொருட்களை வழங்கும் போது கைது செய்யப்பட்டார்.

## 14 கூட்டுத்தாபனங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்படும்

(கொழும்பு)

சில கூட்டுத்தாபனங்களையும் சில அரச நிறுவனங்களையும் தனியாரிடம் ஒப்படைக்க அரசு கொள்கையளவில் தீர்மானித்துள்ளது.

இந்த நிறுவனங்கள் தனியார் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டாலும் ஊழியர்களின் தொழிலுக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டுத்தாபனங்கள் நட்டத்தில் இயங்கி வருவதாலும் போதிய உற்பத்தி இல்லாததாலுமே இவ்வாறு தனியாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆட்சியின்போது கூட்டுத்தாபனங்களை தனியாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

## மது, சிகரட் பாவனையால் 600 கோடி ரூபா வருமானம்

(கொழும்பு)

மதுப் பிரியர்களாலும், புகைப்பிடிப்பவர்களாலும் அரசாங்கத்திற்கு அறு நூறு கோடிரூபா கிடைத்துள்ளதாக மத்திய வங்கிபுள்ளி விபரங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகைப் பிடிப்பவர்களால் 1988இல் 130 கோடி ரூபா வருமானம் கிடைத்தது. 1989 இல் இது நானுற்றி அறுபதி கோடியாக அதிகரித்துள்ளது புகைப்பிடிப்பவர்களின் தொகையும் தினமும் அதிகரித்துவருகிறது

இதேபோலமதுப்பிரியர்கள் 1989 இல் நடுப்பகுதியில் பெரிதும் பாதிக்கப் பட்டனர். ஜே. வி. பி. நடவடிக்கைகளால் இந்த விற்பனை தடைப் பட்டது. ஆனால் இவ்வாண்டு விலையும் அதிகரித்து வருமானம் கிடைத்துள்ளது.

## 27 வருடங்களாகியும் திருத்தப்படாத வீதி

(கொழும்புத்துறை)

தொல்புரம் வழக்கபரை பாணாவெட்டி ஊடாகத் தொல்புரம் மூட்டுச்சந்தை வழியாகக் காரைநகர் வீதியைச் சந்திக்கும் இரு மைல் நீளமான வீதி கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது.

துவிச்சக்கர வண்டியில் செல்வது கூட இப்பாதையில் மிகச் சிரமமாக இருக்கின்றது.

இப்பாதையை அதிகமாகப் பயன்படுத்தும் விவசாயிகள், மீனவர்கள், பால் வியாபாரிகள். பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பெரும் சிரமத்துக்கு ஆளாகின்றனர்.

கடந்த 27 வருடங்களாக இவ்வீதி புனரமைப்புச் செய்யப்படவில்லை' இவ்வீதியைப் புனரமைப்பது பற்றியும், நிதி ஒதுக்கீடு செய்து திருத்தும்படி பல தடவை சம்பந்தப்பட்ட மராமரதுப் பகுதிச் செயலகத் திட்டமிடல் பகுதியினருடன் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய ஆசிட்க் குழுவினர் நேரிலும், கடிதமூலமும் கோரி இன்றுவரை ஒருவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அறியத்தக்கது. (24)

## 4,35000 ஏக்கர் காணிகள் ஏழைகளுக்கு பகிர்ந்தளிப்பு

நான்கு லட்சத்து முப்பத்தையாயிரம் ஏக்கர் காணி வறிய மக்களுக்கு பகிர்ந்து அளிக்க ஜனதிபதி ஆர் பிரேமதாசா நடவடிக்கை எடுத்துள்ளார்

ஜனாதிபதிநியமித்தகாணிப் பகிர்வு விநியோகம் தொடர்பானசெயலணிக்குழு இதனை மேற்கெகண்டுள்ளது

இது தொடர்பான காணிக் கச்சேரிகள் விரைவில் நாடு முழுவதும் நடாத்தப்படும்.

விவசாயத்தில் ஈடுபடுபவர்களுக்கும் விவசாயத்துக்குரிய காணிகள் வழங்கப்படவுள்ளது

## நோயாளிகளுக்கு மீண்டும் மீன்

(களுவாஞ்சிக்குடி)

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்களுக்கேற்பட்ட நோய் காரணமாா மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு உணவுடன் மீன்கறியும் பரிமாறப்படுவது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது

தற்போது மீன்களுக்கான நோய் வெகுவாக குறைந்து விட்டதால், மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்யப்படும் மீன் வகைகள் தினமும் தீவிர ஆய்வுகூட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சமைக்கப்பட்டு உணவுடன் தற்போது பரிமாறப்பட்டு வருகின்றது. (45)

### யாழ்நகரில் இன்றைய சினிமா

**வின்ஸர்-யாழ்**
தினசரி 4-00, 6-45, 9.45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
**கண்ணன் வருவான்**
(புதிய பிரதி)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)


# வடமாகாணத்தின் வீடியோ படப்பிடிப்பின் சரித்திரத்தில் முதன் முதலாக அறிமுகமாக்கப்பட்டுள்ளது

"CHROMA KEY VIDEO MIXER" R-G-B PRISM SYSTEM PROFESSIONAL QUALITY

வீடியோ கலப்பு (Mixing) படப்பிடிப்பின் புதிய தொழில் நுட்பம்

❋ வீடியோ கலப்பு (Mixing) படப்பிடிப்பின் புதிய தொழில் நுட்பம் ❋

❋ J. V. C, *Colour Special Effects Generator Video Mixer*
❋ J. V. C. *Red - Gain, Green - Gain, Blue - Gain, Vertical - Drive, Horizontal - Drive, Syng, Syng Reference Signal Output, Chromalevel C. C. D. Video Camera* இணைவுடன்

❋ முற்றிலும் புதுமையான வீடியோ தொழில் நுட்பம் ❋

பல்வேறு கோணங்களில் அமைக்கப்பட்ட உலகப்புகழ்பெற்ற

**J. V. C. NATIONAL, SONY, HITACHI, RCA**

வீடியோ கமரா மூலம் வியக்கத்தக்க வண்ணமிகு படப்பிடிப்பு

உங்கள் மங்கல நிகழ்ச்சிகள் அனைத்தையும் புதுமை நிறைந்த
வீடியோ நிகழ்ச்சிகளாக படமாக்கிக் கொள்ள.....



# EXPO VIDEO COMPLEX

(AIR - CON)

**No. 7, K. K. S. Road, KONDAVIL**

# எக்ஸ்போ வீடியோ கொம்பிளக்ஸ்

(குளிரூட்டப்பட்டது)

இல. 7, கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

(B 814)

# தேவை ஏற்படின் லித்வேனியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும்

(மொஸ்கோ)
லித்வேனியாவில் தேவைப் படுமானால் படைப்பலத்தை மேலும் பிரயோகிக்க தயாராய் இருப்பதாய் சோவியத் யூனியன் எச்சரித்திருக்கிறது.

ஜனாதிபதி கொர்பச்சேவின் ராணுவ ஆலோசகர் வெளிநாடுகளின் செய்தி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்தார்.

லித்வேனியப் பிரிவினைவாதிகள் சட்டத்தை மீறினால் அதை அடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மொஸ்கோவின் பொருளாதார தடைகளை லித்வேனியா மேலும் எதிர்கொள்ள வேண்டி இருக்கும் எனவும் அவர் கூறினார்.

இதற்கு முன்னதாக சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் லித்வேனியா மீது தாம் இராணுவ பலத்தையோ அன்றி பொருளாதார தடைகளையோ விதிக்கப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

குடியரசுகள் பிரிந்துசெல்லுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதற்கு சட்டமும் இருக்கிறது என்று கூறிய கொர்பச்சேவ் லித்வேனியா மீது அடுத்தடுத்து இராணுவ நடவடிக்கைகளையும், பொருளாதாரத் தடைகளையும் விதிக்கப்போவதாக எச்சரித்திருக்கிறது.

அத்துடன் கிழக்கைரோப்பிய நாடுகள்விட்ட தவறினை தாம் மேற்கொள்ளாது என சோவியத் அரசு முன்னர் குறிப்பிட்டிருந்தது. அதாவது கிழக்கைரோப்பிய நாடுகள் தமது பிரதேசத்தில் நடைபெற்ற போராட்டங்களை இராணுவ நடவடிக்கை மூலமும், பொருளாதார தடை மூலமும் ஒடுக்கின. ஆனால் தாம் அந்த தவறினை விடமாட்டோம் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் கடந்த வாரங்களில் ஒரு அச்சுக்கூடத்தையும், லித்வேனியாவுக்கு வந்த உணவுக் கப்பல்களையும் திசை திருப்பியமை போன்ற நடவடிக்கையும் இதனை மீறுவதாகவே உள்ளது.

இதேவேளை சோவியத் அரசின் இந்நடவடிக்கைகளை அமெரிக்காவின் ஜோர்ஜ் புஷ் நிர்வாகம் வன்மையாக கண்டித்ததுடன் மாற்று வழிகளை ஏற்படுத்தவும் முயல்வதாக குறிப்பிட்டிருக்கிறார்.

## சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக் கூட்டம்

(நியூயோர்க்)
சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு பற்றி விவாதிக்க ஐ. நா. பேரவை சிறப்புக் கூட்டத் தொடர் நேற்று நியூ யோர்க்கில் தொடங்கியது.

இக் கூட்டத்தில் வறுமையை குறைப்பதற்கான திட்டங்களை வகுக்கும் யோசனை ஒன்றை வற்புறுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியா சார்பில் கலந்து கொள்ளும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஐ. கே. குஜரால் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சருடன் காஸ்மீர் பிரச்சினை பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார்.

## சோவியத் விண்கலத்தில் ஈரானிய வீரருக்கும் இடம்

(மொஸ்கோ)
ஈரானிய விண்வெளி வீரர் ஒருவரை சோவியத் விண்கலத்தில் விண்வெளிப்பயணத்திற்கு அனுப்புவதைப் பற்றி தெஹ்ரானில் நடைபெற்ற சோவியத் ஈரானிய பொருளாதாரக் கமிஷன் கூட்டத்தில் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

கூட்டு விண்வெளிப் பயணத்திற்காக பல வெளி நாடுகள் சோவியத் அரசின் கிளாவ் காஸ்மோஸ் என்னும் விண்வெளிப் பயணம் அமைப்பை அணுகியுள்ளன.

ஜப்பான், பிரித்தானியா ஆஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் விண்வெளி வீரர்கள் சோவியத்விண்வெளி வீரர்களுடன் கூட்டு வெளிப் பயணத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இதற்கு முன்னதாக இந்திய விஞ்ஞானியான ராஜேஷ் சர்மா சோவியத் விண்வெளி வீரர்களுடன் பயணம் செய்தமை குறிப்பிடத் தக்கது.

## மண்வளம் காப்போம்

(வவுனியா)
உள்ளூராட்சித் திணைக்களமும்நகரசபையும் இணைந்து எதிர்வரும் 22ஆம் திகதி வவுனியாவில் 'மண் வளம் காப்போம், தினத்தைக் கொண்டாட உள்ளன.

சூழல் பாதுகாப்பு மற்றும்

## பாகிஸ்தான் நிரூபிக்க வேண்டும் பாரதப் பிரதமர் சிங் கூறுகிறார்

(காங்ரொக்)
இந்தியாவுடன் இரு தரப்பு தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ள தனக்குள்ள விருப்பத்தை பாகிஸ்தான் நிரூபிக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் வி.பி. சிங் கூறியுள்ளார்.



நல்லுறவுகளை நோக்கி இந்தியா இரண்டடி எடுத்து வைக்கும் போது பாகிஸ்தான் ஒரு அடியாவது எடுத்து வைக்க வேண்டும் என்று மேலும் அவர் குறிப்பிட்டார்.

ஞாயிற்றுக்கிழமை சிக்கிமில் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் பாகிஸ்தான் போர் நடவடிக்கை என்று ஏதாவது செய்ய முயன்றால் இந்தியா தக்க பதிலடி கொடுக்கும் என்பதை மீண்டும் தான் பாகிஸ்தானுக்கு நினைவு படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு அதி நவீன ஆயுதங்களை வழங்கி கிளர்ச்சியை தூண்டி விடுவதாக பாகிஸ்தான் மீது குற்றஞ்சாட்டிய பிரதமர், பாகிஸ்தானின் உள் விவகாரங்களில் இந்தியா ஒரு போதும் தலையிட்டதில்லை. ஆனால் பாகிஸ்தானே நமது உள்விவகாரங்களில் தொடர்ந்து தலையிட்டு உள்நாட்டுக் குழப்பத்தை, ஒற்றுமையை குலைக்கிறது என்று குறிப்பிட்டார்.

தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததன் பின்னர் பாகிஸ்தானைத் தவிர ஏனைய அயல் நாடுகளுடனான உறவுகள் மேம்பட்டுவிட்டதாக சுட்டிக் காட்டினார்.

பாகிஸ்தானை ஒட்டிய எல்லைப் பகுதியில் தனது துருப்புக்களை குவித்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருவதாக கூறினார் பாகிஸ்தான் தீவிரவாதிகள் மூலம் தனது பிரதேச ஆசையை நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறது. ஆதலால் தான்எல்லா விபரங்களையும் மக்களிடம் தெரிவிக்கிறேன்என்று வி. பி. சிங் கூறினார்.

இதேவேளை காஷ்மீர் நெருக்கடியைத் தீர்க்க போர்



நடத்துவதில்லை என பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ முடிவு செய்துள்ளதாக அறிவித்திருக்கிறார்.

சவுதி மன்னர் பாஹிட்டை பாகிஸ்தான் பிரதமர் சந்தித்து பேசிய பின்னர் இம் முடிவு எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

தென் ஆசிய பிராந்திய அமைதி, நிலைப்பாடு என்பவற்றை கருத்திற் கொண்டு காஷ்மீர் நெருக்கடியை சமாதானமாக தீர்ப்பதற்கு தாம் விரும்பியதாகவும் பெனாசிர் குறிப்பிட்டார்.

## தாந்தாமலை குளத்தில் நன்னீர் மீன்பிடித்திட்டம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு தாந்தாமலை குளத்தில் மீன் பிடித் தொழில் விருத்தி செய்வதற்காக அண்மையில் 50,000 மீன் குஞ்சுகள் குளத்தில் விடப்பட்டுள்ளதாக மாவட்ட மீன்பிடி விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு.எஸ்.ரி.ஜோர்ஜ் தெரிவித்தார்.

இக்கினியாகல குளத்திலிருந்து கொண்டு வரப்பட்ட றோகு, பெரியதலைகார்ப் ஆகிய இருவகை மீன் இனங்களும் இதில் அடங்கும்.

ஒரு வருட காலத்திற்குள் இம்மீன் உற்பத்தி பன்மடங்கு பெருகி விடும். இதன் மூலம் சுமார் 200 மீனவ குடும்பங்கள் நன்மைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (37)

## பவளக்கால் நாட்டு வைபவம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி கல்வயல் அருள்மிகு வேதவனப் பிள்ளையார் கோவில் சித்திரத் தேர் பவளக்கால் நாட்டு வைபவம் 29 ஆம் திகதி காலை 8 மணிமுதல் 9 மணி வரை நடைபெறவுள்ளது.

## மட்டக்களப்பு பகுதியில் தென்னம் செய்கை ஊக்குவிப்பு

(ஏறாவூர்)
1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியினால் பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை தெங்குப் பயிர்ச் செய்கையை விருத்தி செய்வதற்காக அரசாங்கம் மானியத்திட்டத்தின் மூலம் மைலம்பாவெளிநாற்றுமேடையில் உற்பத்தியாக்கப்பட்ட தென்னங்கன்றுகளை இலவசமாகவும் பின்னர் குறைந்த

டும் தெங்குச் செய்கையை விருத்தி செய்வதில் மக்கள் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

தெங்கு ஆராய்ச்சி சபையினால் தெரிவு செய்யப்பட்ட 53000 விதைத் தேங்காய்கள் மைலம்பாவெளி நாற்று மேடைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அத்தேங்காய்களில் கலப்பு உயர் இன வர்க்கம்

## அமைச்சர் மஹ்ரூப் காங்கேசனுக்கு வருவார்

(கொழும்பு)
நாட்டில் உள்ள துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய துறைமுககப்பல் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனையடுத்துதுறைமுக கப்பல் துறை ராஜாங்கஅமைச்சர் ஜனாப் எம்.ஈ.எச்.மஹ்ரூப் அண்மையில் திருக்கோணமலை

மைகளைப் பின் வெளியிட்டார்

விரைவில் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் அவர் விஜயம் செய்வார் என அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கவிதைப் போட்டியில் செல்வந்தி முதலிடம்

காத்தான்குடியின்

## உதவி அரச அதிபர் பணிமனை கட்டட வேலைகள் தாமதம்

(காத்தான்குடி)
காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான புதிய கட்டிடம் இவ்வாண்டிலாவது திறந்து வைக்கப்பட வேண்டும் என பலரும் எதிர்பார்க்கின்றனர்.

இக்கட்டிடம் கல்முனை, மட்டக்களப்பு பிரதான பாதையில், காத்தான்குடி 6 ஆம் குறிச்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் மட்டக்களப்பு இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப். அகமட் றிஸ்வி சின்னலெப்பை இப் புதிய கட்டிடத்திற்கான நிதியைத் தமது பன்முகப் படுத்தப்பட்ட வாவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கியிருந்தார்.

இக்கட்டிடத்தின் முதற்கட்

இங்குநிலவும் எழுதுவினைஞர் பற்றாக்குறை பிரதான காரணமாகும்.

11 எழுதுவினைஞர்கள் பணியாற்ற வேண்டிய இவ் வலுவலகத்தில் 3 எழுதுவினைஞர்கள் மட்டுமே தற்போது பணியாற்றி வருகின்றனர். காத்தான்குடி பிரதேச வாழ் மக்களின் கிராம சேவகர் உ. அ அ. தரப்புப் பணிகளை, இம் மூவருமே கவனித்து வருவதால் பொது மக்களின் கருமங்கள் தாமதமாகின்றன.

தற்போதைய அலுவலகத்தில் இடம்பற்றாக் குறையும் நிலவுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரி

டாட உள்ளன.

சூழல் பாதுகாப்பு மற்றும் மண்வளம் பற்றிய விளக்கவுரைகளும்' இது சம்பந்தமான வீடியோ காட்சிப்படமும் காண்பிக்கப் பட உள்ளது.

அடுத்த தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் இது சம்பந்தமான பொருட்காட்சியும் நடாத்தப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

தென்னங்கன்றுகளை இலவசமாகவும் பின்னர் குறைந்த விலையிலும் வழங்கியது.

ஆனால் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக இந் நாற்று மேடையில் தேங்காய் பதியப்போடுதல் தடைப்பட்டதுடன் மக்களின் ஆர்வமும் படிப்படியாக குறைந்து காணப்பட்டது.

தற்போது நிலைமை சீரடைந்து வருவதனால் மீண்டுள்ளன. அத்தேங்காய்களில் கலப்பு உயர் இனவர்க்கம் 5000 மும் சாதாரண இனம் 36000 மும் பதியப் போடப்பட்டிருக்கின்றன.

இவை இவ்வருட நடுகைக்காக அக்டோபர் - நவம்பர் மாதங்களில் விநியோகிக்க முடியுமென தென்னைப்பயிர்ச் செய்கை சபையின் மட்டக்களப்பு பதில் பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். சிவச்சந்திரன் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தார். (56)

சர்ஜனாப் எம்.ஈ.எச்.மஹ்ரூப் அண்மையில் திருக்கோணமலைத் துறைமுகத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலை

## கண்ணகை அம்மன் திருவிழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத் திருவிழா நாளை ஆரம்பமாகும்.

## கவிதைப் போட்டியில் செவ்வந்தி முதலிடம்

(கிளிநொச்சி)

இந்து கலாச்சார தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சும் வீரகேசரி பத்திரிகை நிறுவனமும் இணைந்து நடாத்திய அகில இலங்கை ரீதியிலான தமிழ் கவிதைப்போட்டியில் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கவிஞர் செவ்வந்தி மகாலிங்கம் முதலாம் இடத்தைப் பெற்றார்.

யிருந்தார்.

இக்கட்டிடத்தின் முதற்கட்டப் பணிகள் யாவும் முடிவடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. எனினும் கட்டிடப் பொருட்களின் விலையேற்றத்தால், இரண்டாம் கட்ட வேலைகள் நடைபெறுவது தாமதிக்கப்பட்டிருக்கிறது.

கட்டிடத் திணைக்களம், இரண்டாம் கட்ட வேலைகளுக்கான ஒப்பந்தத்தைத் தாமதமின்றி ஒப்பந்தக்காரருக்கு வழங்குமிடத்து இப் புதிய அலுவலகம் விரைவில் திறக்கப்பட வழியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் காத்தான்குடி யிரதேசசபை அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது.

ஆரம்பத்தில் 8 கிராமசேவகர்களைக் கொண்டிருந்த காத்தான்குடி உ. அ. அ. பிரிவில் தற்போது 18 கிராமசேவகர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களின் துரித வேவையை மக்கள் பெற இயலாமைக்கு

நிலவுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊழியர் பற்றாக்குறை தீர நடவடிக்கை எடுப்பதுடன், புதிய கட்டிடத்தையும் விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் பலரும் விரும்புகின்றனர். (55)

## கொண்டல் பத்திரிகை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் ''கொண்டல்'' என்னும் வாராந்த செய்தி பத்திரிகையொன்று வெளியாகியுள்ளது.

இப்பத்திரிகை வெளியீட்டு விழா அண்மையில் சிரேஷ்ட பத்திரிகையாளர் திரு. வீ. சு. கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

இராம கிருஷ்ண மிஷன் சுவாமி இராஜேஸ்வரானந்தஜீ, வண பிதா லோப்பு, மௌலவி எம். யாசீன் ஆகியோர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினர்.

# தமிழீழ மக்கள் அனைவரும் சமனானவர்கள்

(அம்பாறை நிருபர்)

''தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் கொள்கையில் எமது தமிழீழ மக்கள் அனைவரும் சமமென்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதனையே பாண்டிருப்பு புத்தாண்டு விழா பிரதிபலிக்கின்றது''

பாண்டிருப்பு இளைய தலைமுறையினர் பாண்டிருப்பு துரௌபதை அம்பாள் ஆலய முன்றலில் நடாத்திய சித்திரைப்புத்தாண்டு விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சியான கலை விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட புலிகள் இயக்க மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. கே. இரத்தினவேல் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. காஸ்ரோ தொடர்ந்து பேசுகையில் பாண்டிருப்பு இளைய தலைமுறையினர் நடாத்தும் இப்புத்தாண்டு விழா கால மாற்றத்தின் பிரதிபலிப்பைக் காட்டுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். சாதி, சமய, இன, மத வேற்றுமைகளை கடந்த ஒரு சமரச நிலையினை இங்கு காண்கிறேன். இவ் விழாவில் முஸ்லீம், தமிழர், பறங்கியர் சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களும், யுவதிகளும் கலந்து கொண்டு ஒற்றுமையைப் பிரதிபலிப்பது ஒரு சிறப்பான அம்சமாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் கொள்கையும் இதுவேயாகும். என்றார்.

அம்பாறை மாவட்ட பிரஜைகள் சமாதானக்குழுத் தலைவரும் கல்முனைப் பிரதேச பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுச் செயலாளருமான திரு. பாண்டியூரன் உட்பட பலர் உரையாற்றினார்கள். (48)

## உபகாரச் சம்பள விபரங்கள் மறுபரிசீலனை

(காத்தான்குடி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூகசேவைகள் திணைக்களம் மூலம் உபகாரச் சம்பளம் பொறுவோரின் விபரங்கள் மறுபரிசீலனை செய்யப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் திரு. இரா. தியாகராஜா மாவட்டத்திலுள்ள சகல கிராம சேவகர்களையும் கேட்டுள்ளார்.

இம்மறுபரிசீலனை நடவடிக்கைக்குத் தேவையான விஷேட படிவங்கள் மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (55)

# மக்களே எமது சக்தி மக்களுக்காகவே போராட்டம்

(வவுனியா)

மக்கள் தாம் எமது சக்தி. மக்களுக்காகவே எமது போராட்டம் நடைபெறுகிறது, மக்கள் தண்ணீர் என்றால் நாம் மீன்கள். எமது இலட்சியப் போராட்டம் உங்களின் ஒத்துழைப்புடன் தான் வெற்றியடைய முடியும்.

வவுனியா பூந்தோட்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை மாலை உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த அன்னை பூபதி நினைவுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா நகர அரசியல் பொறுப்பாளர் திரு. ஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அன்று முழுநாள் உண்ணாவிரத அனுஷ்டிப்பு மக்களால் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆரம்பத்தில் அரிசிப் பொதிகளைப் போட்ட இந்தியா, எமக்கு அமைதி பெற்றுத்தருவதாகக் கூறி, எமது பிரதேசங்களை ஆக்கிரமித்தது. நாம் சுதந்திர உணர்வுடன், எமது இலட்சியத்தைப் பெறும் நோக்குடன், முனைப்புடன் போராடிக் கொண்டிருந்த வேளையில், எமது போராட்டத்தை மழுங்கடிக்க முனைந்தது இந்தியா.

எமது போராட்டம் நீடிக்க வேண்டும். நாம், எமக்கான விடுதலையைப் பெறவேண்டும் என்ற நோக்குடனேயே அன்னை பூபதி அவர்கள் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தார்.

ஒருநாள் முழுதும் உண்ணா விரதம் அனுஷ்டிக்கும் நீங்கள் ஒரு மாதம் உண்ணாவிரதம் அனுஷ்டித்து உயிர் நீத்த அன்னையின் தியாகத்தைச் சிந்தித்துப் பாருங்கள்.

நாம் கடந்து வந்த பாதைகளில் பல தடங்கல்களைச் சந்தித்துள்ளோம். எமது போராட்ட காலத்தில் பல நிகழ்வுகளைக் கண்டுள்ளோம் இன்று உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் புலிகளுக்கே முதலிடம் கிடைத்துள்ளது.

இன்று மக்கள் ஒன்றுபட்ட சிந்தனையுடன், ஒருமித்த கருத்துடன் வாழ்கிறார்கள். மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் அனைவரும் பங்கு கொண்டு, ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று தெரிவித்தார்.

எஸ். சிவஞானசுந்தரத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சமாதான நீதவானும், வவுனியா மாவட்ட இணக்க சபைகளின் பொறுப்பாளருமாகிய திரு. பொன்னம்பலம் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

- ஞானம்

# வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகள் புனரமைக்கப்படும்

## -உதவி அரசாங்க அதிபர்

(காத்தான்குடி)

காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளைத் திருத்தியமைப்பதற்கு விசேட நிதிக் கொடுப்பனவு வழங்கப்படும்.

சமூக சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஊடாக, உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தால் இவ்வுதவி அளிக்கப்படும்.

இத்தகவலை காத்தான்குடி உதவி அரசாங்க அதிபரும், விசேட ஆணையாளருமான ஜனாப். எம். உதுமாலெப்பை பீ, ஏ. எமது நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில். ''சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் இப்பிரதேசம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது, இதற்காக சமூக சேவைகள் திணைக்களம் 2,47,465 ரூபா பெறுமதியான அரிசியை உ.அ.அ. அலுவலகம்ஊடாக காத்தான்குடி ப. நோ. கூ. சங்கம் மூலமாக விநியோகித்துள்ளது''

இதுதவிர பாகிஸ்தான் அரசும் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்காக 12.000 கிலோ அரிசியை அன்பளிப்பாக வழங்கி உதவியது. இந்நிவாரணங்கள் யாவும் பிரதேசத்திலுள்ள 9 கிராம சேவையாளர்கள் மூலமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது என்று கூறினார். (55)

## விளையாட்டுப் போட்டியும் கலைவிழாவும்

அன்னை பூபதியின் நினைவாக மைலம்பாவெளி கிராம அபிவிருத்திச் சங்கமும், விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்திய மாபெரும் விளையாட்டுப் போட்டியில் நாற்பது மைல் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் இன்னும் பல நிகழ்ச்சிகளும் நடைபெற்றன நிகழ்ச்சி முடிவில் பரிசில்கள் வழங்கப்பட்டது. இவ் விளையாட்டுப் போட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஆதரவில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து வந்தாறுமூலை சாயி பஜன் மண்டலி வழங்கிய நடனம் வந்தாறுமூலை இளைஞர் கழக குழுவினரின் இசைக் கானங்கள் நடைபெற்றன.

## ஓமந்தை அகதிகளுக்கு மீளக்குடியமர நடவடிக்கை

(வவுனியா)

கடந்த கால வன்செயலினால் பாதிப்படைந்து ஓமந்னதயில் அகதிகளாகத் தங்கியிருந்த குடும்பங்கள்அனைத்தும் பணிக்கர் புளியங்குளம்,மாணிக்கர் வளவு போன்ற இடங்களில் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

கடந்த ஒரு ஆண்டுகளாக இக் குடும்பங்கள் அனைத்தும் ஓமந்தை நலன்புரிச்சங்கத்தில் தங்கியிருந்தனர்.

தற்போது பணிக்கர்புளியங் குளத்தில் பதினேழு குடும்பங் களும், மாணிக்கர் வளவில் 21 குடும்பங்களும் குடியமர்த் தப் பட்டுள்ளனர்

இவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்ட வேலைகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் வவுனியா தெற்கு தமிழ் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா அற்புதராஜா தெரிவித்தார். (தி)

## அன்னை பூபதி உருவச்சிலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி சந்தியில் அன்னை பூபதி உருவச்சிலையை அன்னையின் நினைவு தினமன்று தமிழீழ விடுதலைப் புலிகள் பிராந்திய தளபதி கருணா திரை நீக்கம் செய்து வைத்தார்.

கல்லடி சிற்றூர் கிளையினால் ஏற்பாடு செய்யப் பட்ட இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிபிரதி தலைவர் எஸ்.கரிகாலன் உட் படப்பலரும் கலந்து கொண்டனர்.

## முறைப்பாடுகளைதெரிவிக்க தனியான பெட்டிகள்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தில் பொது மக்கள்தமது முறைப்பாடுகள், கருத்துக்களை தெரிவிப்பதற்காக அஞ்சல் பெட்டி வைக்கப் பட்டுள்ளது.

தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் திருவே.பிரபாகரன் விடு தலைப் புலிகள் மக்கள் முன்னணிபிரதி தலைவர் திரு எஸ் கரிகாலன் தமிழீழ விடுதலைப்புலிகள் பிராந்திய தளபதி திரு கே.கருணா ஆகியோருக்கு தனித்தனியாக அஞ்சல் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் பொதுவான அஞ்சல் பெட்டியொன்றும்நகரில் வைக்கப்பட்டுள்ளது 37

## புளியங்குளம் -முல்லைத்தீவுவீதி சேதமானதால் பஸ்கள் இல்லை

(வவுனியா)

புளியங்குளம்- முல்லைத் தீவு பிரதான வீதி சேதமடைந்துள்ள காரணத்தினால் பஸ் சேவைகள் அவ் வீதியில் மேற்கொள்ளப்படுவது குறைவாக இருக்கிறது.

இதன் காரணமாக மேற்படி வீதியில் பிரயாணத்தை மேற்கொள்வதற்கு பயணிகள் கஷ்டப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில உள்ளூர் வான்கள் ஓடுவதனால் தான் மக்கள் தமது பிரயாணத்தை ஓரளவிற்கு மேற்கொள்ளக்கூடியதாக இருக்கிறது என்றும் அமைதி ஏற்பட்ட பின்பும் வீதி வேலைகளை ஆரம்பித்து பஸ் போக்குவரத்துகளை சீர்படுத்த எவரும் முயலவில்லை என்றும் மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். இது பற்றி இவற்றுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசியும்கூட எதுவித நன்மையும் கிட்டவில்லை என்றும் புகார்தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

# திறமை அடிப்படையில் நியமனங்கள் இடம்பெறும்

## பொது நிர்வாக அமைச்சர் சுற்றறிக்கை!

அரச பொதுச்சேவை, மாகாண பொதுச்சேவை, அரச கூட்டுத்தாபனங்கள், ஆகியவற்றில் நியமனம், பதவி உயர்வு என்பன அரசியல் ஆதரவு இன்றி திறமை அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும்.

இவ்வாறு பொது நிர்வாக மாகாணசபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் சகல திணைக்கள கூட்டுத்தாபன, அரச கம்பனிகள் தலைவர்கள் அமைச்சுகள் செயலாளர்களுக்கு 15/90 இலக்க சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

அவரது சுற்றறிக்கையிலுள்ள மேலும் சில தகவல்கள் வருமாறு:

ஆட்சேர்ப்புக்கு அங்கீகரிக்கப்பட்ட திட்டம் இருத்தல் வேண்டும்.

ஒருவரின் திறமை எழுத்து பரீட்சை அல்லது எழுத்து தேர்வு அல்லது தொழிற் தேர்வு மூலம் நிர்ணயிக்கப் படல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி என்றால் நேர்முகப் பரீசை மட்டும் நடைபெறல் வேண்டும். நேர்முகப் பரீட்சைகள் தகமை சான்றிதழ். உடனல தகுதிகளுக்கு மட்டும் தான் நடைபெறல் வேண்டும்.

தேசிய மட்டத்திலான, மாகாண மட்டத்திலான, மாவட்ட மட்டத்திலான நியமனங்கள் தேசிய மாகாண மாவட்ட இனவிகிதாசார அடிப்படையில் வழங்கப் படும். உதாரணம்:- தேசிய மட்டம் சிங்களம்:- 75% இலங்கைத் தமிழ் 12.7% இந்தியத் தமிழ் - 5.5% முஸ்லிம் 8% என அமையும்.

மாகாண ரீதியில் ஆட்சேர்ப்பு அம் மாகாண விகிதாசாரத்தில் அமையும். மாவட்ட ரீதியில் ஆட்சேர்ப்பு மாவட்ட ரீதியில் அமையும்.

இந் நிபந்தனைகள் 1- 1- 1990 முதல் அமுலுக்கு வந்துள்ளது. பதவி உயர்வுகளும் இதில் அடங்கும்.

1987, 1988, 89 ஆம் ஆண்டு பதவி வெற்றிடங்கள் ஏற்கனவே 1- 1- 90 க்கு பின்பு செய்யப்பட்டிருந்தால் தடுக்கப்படல் கூடாது. மேலதிக பதவிகள் உருவாக்குதல் மூலம் இன விகிதாசாரம் செயல்படுத்தப்பட வேண்டும்.

சில பதவிகள் விகிதாசார அடிப்படையில் வழங்கப் போதுமானதாக இல்லையேல் திறமைக்கு இடமளிக் கப்படல் வேண்டும்.

போட்டிப் பரீட்சை மூலம் நியமனம் வழங்குவதாயின் பரீட்சைக்கான பாடத்திட்டம் முன் கூட்டிடியே அறிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரி விரும்பும் மொழியில் நடைபெறல் வேண்டும் என அச் சுற்றறிக்கை கூறுகிறது. (37)

## கண்டெடுத்த அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

பின்வரும் அடையாள அட்டைகள் ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நவரத்தினம் அருள்சோதி குணரத்தினம் நடராசா,அமிர்தலிங்கம், ஆனந்தகுமார் பாலகிருஷ்ணன் ஸ்ரீதரன் பொன்னையா மோகனதாஸன், சுப்பிரமணியம் லில்லி திரேசா, சுப்பையா வரதராசா

உரியவர்கள் அலுவலக நேரத்தில் எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## பயணிகள் ஏறுவதற்குமுன் பஸ் புறப்பட்டதால் காயம்

(கரவெட்டி)

பஸ்ஸில் பயணிகள் ஏறுவதற்கு முன்னரே பஸ் புறப்பட்டதால் கத்தோலிக்க ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு சி.வின்சன்ற் பஸ் மிதி பலகையிலிருந்து. தூக்கி வீசப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை நெல்லியடிபஸ் நிலையத்தில் இடம் பெற்றது.

வேறு ஒரு பெண்மணிக்கு சிறிது காயமும் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுசிறது.

இதனையடுத்து இந்த பஸ்சை நிறுத்துமாறு பஸ்ஸில் இருந்தவர்கள் மணி அடித்தனர்.

இதே போல நெல்லியடி பஸ் நிலையத்திலிருந்த ஏனைய பயணிகள் சத்தமிட்டும் பஸ் நிறுத்தப்படவில்லை.

இந்த பஸ் யாழ்ப்பாணத் திலிருந்து காலை 8மணியளவில் பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த போது இவை இடம் பெற்றன.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

கந்தையா
சேல்ஸ் சென்ரர்
புதிய இல. 157, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

எம்மிடம் தரமான அப்பியாசக் கொப்பிகள், மொனிற்றஸ் கொப்பிகள்,பாடசாலை உபகரணங்கள், அச்சகத்திற்கு தேவையான பேப்பர் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மற்றும் இடங்களிலும் பார்க்க மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

(B-671)


# 1991 முதல் 2000 ஆண்டு வரை போதை வஸ்து தடுப்பு ஆண்டு

## ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சங்கம் பத்தாண்டு காலத்தை, 1919 முதல் 2000 வரையிலான காலப்பகுதியை போதை வஸ்து தடுப்பு ஆண்டுகளாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. பிரதேச வாரியாகவும், தேசிய ரீதியாகவும், சர்வதேச மட்டத்திலும் கெடுதலை உண்டாக்கும் இந்தப் போதை வஸ்துப் பாவனையாளருக்கும், கடத்தல் காரர்களுக்கும் எதிராக முயற்சிகளை மேற்கொள்ள ஐ. நா. சங்கம் தீர்மானித்துள்ளது.

ஜூன் 26 ஆம் திகதியை போதை வஸ்து பாவனையாளருக்கும் போதை வஸ்து கடத்தல் காரர்களுக்கும் எதிரான சர்வதேச தினமாக அனுட்டிக்கப் போவதாக ஐ. நா. சங்சம் அறிவித்துள்ளது.

வஸ்து தடுப்பு, போதைவஸ்துப் பாவனை பற்றிக் கருத்தரங்குகளும், பேச்சுப் போட்டிகளையும் நடாத்த உள்ளது.

ஸ்ரீலங்கா' போதை வஸ்து தடுப்புச் சங்கம், மதுபானம போதைவஸ்து தகவல் நிலையம், ஆகிய மனிதநேய ஸ்தாபனங்களால் வெளியிடப்பட்ட பிரசுரங்கள் நாடெங்கிலும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. பள்ளிக்கூடங்களில் மாணவர்களின் பாவனைக்காக பிரசுரங்களைப் பிரதி எடுக்கலாமாம். பிரசுரங்கள் நாடு பூராகவும் உள்ள பொலிஸ் நிலையங்களில் மாணவர்களின் பார்வைக்காக வைக்கப்படும்.

மாணவர்களுக்கிடையிலான முதற்கட்டப் பேச்சுப் போட்டிகள் பொலிஸ் பிரிவுகள் தோறும் நடாத்தப்படும் ... தேவையான தகவல்களையும், பிரசுரங்களையும் பெற்றுக் கொள்ளும் படி பொலிஸ் தலைமைக் காரியாலயம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

போதை வஸ்துப் பாவனையால் ஏற்படக் கூடிய தீங்குகளை விளக்குவதுதான் இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

போதைவஸ்து பாவனை தொடர்பானபேச்சுப்போட்டிகளுக்கு வழங்கப்படும் தலைப்புகளை மாணவர் குழு முயற்சியாகவே மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிறந்த குழு முயற்சி எது என்பதை நடுவர்கள் தீர்மானிப்பார்கள்.

## நெடுங்கேணி பகுதிகளில் ஏழை விவசாயிகளுக்கு காலபோகம் இல்லை

(வவுனியா)

நெடுங்கேணி உதவி அர ...

உழவுயந்திரங்களுக்குச் சொந்தமான வசதி படைத் ...

## மாணவி மாடியிலிருந்து விழுந்து காயம்


சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4000 ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

## காலபோகம் இல்லை

(வவுனியா)

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள சின்ன அடம்பன், ஆயிலடி, நயினாமடு, அனர்ந்தர் புளியங்குளம் ஆகிய கிராம மக்களில் பலர் கடந்த ஆண்டு காலபோக நெற் செய்கையில் ஈடுபடவில்லை.

குளங்களில் நீர் இருந்தும் போதிய நிலமிருந்தும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக நெற் செய்கையில் ஈடுபடவில்லை என்று அக் கிராமவாசிகள் தெரிவித்தனர்.

உழவு யந்திரங்களுக்குச் சொந்தமான வசதி படைத்தவர்கள் மட்டும் நெற் செய்கைகளில் ஈடுபட்டனர் என்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் விவசாயிகள் அனைவரும் வசதியுள்ளவர்களுக்கு தமது நிலங்களை குத்தகைக்கு கொடுத்து விட்டார்கள் என்றும் மேற்படி கிராமவாசிகள் தெரிவித்தனர்.

கடந்த கால வன்செயல்களினால் பாதிப்படைந்துள்ள இவர்கள், வங்கிகளில் கடன் பெற்று விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

கடத்தல் காரர்களுக்கும் எதிரான சர்வதேச தினமாக அனுட்டிக்கப் போவதாக ஐ. நா. சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையிலும் போதை வஸ்துப் பாவனையால் கேடுகள் நிகழ்கின்றன. இளைஞர்களும் போதை வஸ்துக்கு அடிமையாகிறார்கள். பொது மக்களின் ஒத்துழைப்போடு பாதுகாப்புத் துறையினரும் விழிப்புடன் செயற்பட்டால் போதை வஸ்துப் பாவனையைத் தடுக்கலாம் என்பதைக் கருத்திற் கொண்டு, இலங்கைப் பொலிஸ் பள்ளிச்கூடங்களுடன் இணைந்து செயலாற்ற இருக்கின்றது. ஸ்ரீ லங்கா போதை வஸ்து தடுப்புச் சங்கத்தின் உதவியுடன் இலங்கை பொலிஸ் போதை

வைக்கப்படும்.

மாணவர்களுக்கிடையிலான முதற்கட்டப் பேச்சுப் போட்டிகள் பொலிஸ் பிரிவுகள் தோறும் நடாத்தப்படும் இறுதிப் போட்டிகள் கொழும்பில் இடம் பெறும் வணக்கஸ்தலங்கள், பொலிஸ், பள்ளிக் கூடங்கள் ஒன்றிணைந்து இப் போட்டிகளை நடாத்தவுள்ளன.

பள்ளிக்கூட அதிபர்கள் பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு வேண்

## மாணவி மாடியிலிருந்து விழுந்து காயம்

பேராதனைப் பல்கலைக் கழக தமிழ் மாணவியான செல்வி சி. சுமதி ஸ்ரீ பத்மநாதன் விடுதியின் நாலாவது மாடியிலிருந்து கீழே விழுந்ததால் படுகாயமடைந்து கண்டி பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் **4000** ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/- ஐச் சங்கத்தில் செலுத்திச் சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். 28: 4. 1990 சனிக்கிழமை பகல் **12.00** வரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்

(B.815)


## ரம்ழான் கவியரங்கு

(காத்தான்குடி)

புனித ரம்ழான் நோன்புப் பெருநாளை முன்னிட்டு காத்தான்குடி உதவி அரசாங்க அதிபரால் நிறுவப்பட்ட கலாச்சார சபை கவியரங்கு ஒன்றை விமரிசையாக நடாத்தவுள்ளது.

எதிர்வரும் 29-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு இக்கவியரங்கு காத்தான்குடி மீரா பாலிகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச விஷேட ஆணையாளரும், உதவி அரசாங்க அதிபருமான ஜனாப். எம். உதுமான் லெப்பை பி. ஏ. அவர்களின் தலைமையில் நடைபெறும் இக் கவியரங்கில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. யோகநாதன் அவர்கள் கலந்து கொள்வார்.

தெரிவு செய்யப்படும் மூன்று கவிஞர்களுக்கு அவர் பரிசில்களையும் வழங்கி கௌரவிப்பார்.

பிரதேச சபைப் பணியாளர்களும், ஊர்ப்பணி உத்தியோகஸ்தர்களும் பொதுமக்களும் இணைந்து நடாத்தும் இக்கவியரங்குக்கான ஏற்பாடுகளை, சமூகசேவைகள் திணைக்கள பிரதேச உத்தியோகஸ்தர் ஜனாப். எம். பி. சம்சுதீன் துரிதமாக மேற்கொண்டு வருகிறார். (55)

## கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைத்த சீனி மறைவு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கோடியே ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான பழுப்புச் சீனி (கறுப்புச்சீனி) மாயமாக மறைந்து விட்டது.

தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 425 தொன் நிறையுடைய இந்தச் சீனி மறைந்தது குறித்து விசாரணை நடாத்துமாறு உணவு கூட்டுறவு துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி உத்தரவிட்டுள்ளார்.

கசிப்பு காச்சுவதற்காகவே இந்தச்சீனி பயன்படுத்தப்பட விற்கப்பட்டிருக்கும் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை இந்தச்சீனியை உபயோகிக்கக் கூடாது என உணவுத் திணைக்களம் அறிவித்திருந்தும் சுங்க அதிகாரிகளை ஏமாற்றி இந்த மோசடி நடைபெற்றுள்ளது.

## இளம் எழுத்தாளர்களுக்கு கைதடியில் பயிற்சி நெறி

(கைதடி)

அறவழிப் போராட்டக் குழுவினரால் நடாத்தப்படும் இளம் எழுத்தாளர்களுக்கான பயிற்சி நெறி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு கைதடி நவீல்ட் பாடசாலையில் ஆரம்பமாகியது.

இப்பயிற்சி நெறியினை யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தகலாநிதி எஸ். மௌனகுரு நெறிப்படுத்தினார்.

பயிற்சி நெறி ஆரம்ப விழா நிகழ்ச்சி குழுவின் பதில் தலைவர் கோபாலகிருஸ்ணனின் தலைமையில் நடைபெற்றது.

கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் ஜே.எஸ்.டேவிட் இந்த நெறியினை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.


அன்னை பூபதிக்கு
எமது அஞ்சலி



புதிய சகாப்தத்தின் விடிவெள்ளி
அன்னையின் வடிவில் இங்கு வந்து
ஆயிரமாயிரம் நெஞ்சங்களில்
விடுதலைக் கனலேற்றியது
ஏற்றிய அன்னை மறைந்தாள்
ஏற்றி வைத்த தீபம் ஒழியூட்டி
வழி காட்டி நிற்கிறது.

பெயர்ப்பலகைகள் றப்பர் ஸ்டாம்புகள்
புளக்குகள் முதலானவற்றை தரமான
முறையில் செய்து கொள்ள
நாடவேண்டிய இடம்

**தரன் ஸ்ருடியோ**

9, 8, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

(B.813)



அன்னை பூபதிக்கு
எமது அஞ்சலி



தனயனுக்கு திலகமிட்டு
சமர்க்களம் அனுப்பியதே
தமிழர் வரலாறு
கணவன் உனக்கு
திலகமிட்டு களத்திற்கு
அனுப்பி வைத்து
படைத்ததோ புதிய வரலாறு

தரமான ஓடுகள்
விற்பனையாளர்

**மு. தா. பொன்னம்பலம்**

631, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(B.812)

சிந்தனைக்கு

கண்ணிரெண்டும் விற்றுச்
சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 24 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

# என்னத்தைச் சாதிக்கப் போகிறீர்கள்?

இலங்கை அரசாங்கமும் ஜனாதிபதி பிரேமதாசாவும் தங்களையும் அழைத்துப் பேச வேண்டும் என்று ஈ.பி. ஆர்.எல்.எவ். எம்.பி. பிரேமச்சந்திரன் கொழும்பில் இருந்து அறிக்கை மேல் அறிக்கை விடுத்து அடம் பிடிக்கிறார்.

பத்தொன்பது அம்சக் கோரிக்கையை முன் நிபந்தனையாக ஈ. பி. ஆர். எல். எவ். வைத்திருப்பதால் அதனுடன் பேச்சுவார்த்தை நடத்துவது சுலபமல்ல என்றும் நிபந்தனை எதுவுமில்லாமல் பேச விரும்பும் எவரையும் சந்தித்துப் பேசுவதற்கு அரசு தயாராக இருக்கிறதென்றும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்திருக்கிறார்.

பத்தொன்பது அம்சக்கோரிக்கை முன்நிபந்தனை அல்ல என்றும் பேச்சுவார்த்தைக்கான சில யோசனைகள் தரலாமென்றும் ஈ. பி. ஆர். எல். எவ். பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

அப்படியானால் பத்துத் தினங்களுக்குள் பேச்சுவார்த்தை பற்றிப் பதில் அனுப்புவதாக அமைச்சர் ரஞ்சன் கூறியிருக்கிறார்.

தமிழக முதல்வர் கருணாநிதி இலங்கைத் தமிழ்க் குழுக்களிடையே நடத்தி வந்த பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டை போட்ட இந்தப் பத்தொன்பது அம்சக் கோரிக்கை பற்றி இதற்கு முன்னரும் நாம் தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதால் இன்றும் அதுபற்றி ஆராய்ந்து காலத்தை வீணாக்க விரும்பவில்லை.

இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்கு வந்தபோது அதன் பாதுகாப்புடன் ஆயுதம் ஏந்தி வந்த குழுக்களில் ஈ. பி. ஆர். எல். எவ். குழு முக்கியமானது.

ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தத்தின்படி வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு எப்படியோ நடந்த தேர்தலில் எப்படியோ தெரிவான கூட்டுக் குழுக்களில் ஈ. பி. ஆர். எல். எவ். முதன்மை பெற்றிருந்தது.

# தீவுப்பகுதியின் இடஞ்சார்பு அபிவிருத்தித் திறமுறைகள்

ஒரு பிரதேசத்தில் அபிவிருத்தியில் எவ்வாறு துறைசார் அபிவிருத்தி முக்கியமோ அதே அளவு அப்பிரதேசத்தின் இடஞ்சார்பு அபிவிருத்தியும் முக்கியமானதாகும். இருதுறைகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பற்ற அபிவிருத்தித் திட்டம் வெற்றிதரா. மேலும் தரமான, சரியான இடஞ்சார்பு அபிவிருத்தியுடன், பௌதீக அபிவிருத்தித் திட்டமும் சேரும்பொழுது தான் குறிப்பாக அவ்வப் பிரதேசங்களில் காணப்படும் இயற்கை வளங்கள் நல்ல முறையில் பயன்பாட்டுக்கு உட்படுத்தலாம்.

## தீவுப்பகுதி சமூக, பொருளாதார நிலை

தீவுப்பகுதி சமூக – பொருளாதார ரீதியில் நீண்டகாலமாகப் பின்தங்கி நின்று யாழ்ப்பாண நகருக்கும், தீவுப்பகுதிக்கும் 1961ஆம் ஆண்டு வீதி அமைக்கப்பட்ட பின்னரே ஓரளவு அபிவிருத்தியடையத் தொடங்கியது. தீவுப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்ட அபிவிருத்திக்கு ஏற்ப பிரதேசம் வளர்ச்சியடையவில்லை. இதனால் அபிவிருத்தியில் ஓர் இடைவெளி ஏற்பட்டுள்ளது. இந்நிலை காரணமாக சமூக - பொருளாதார ரீதியில் விருத்தியடைந்த குறிப்பாகக் கல்வியில் முன்னேறிய வர்த்தகத்தில் முன்னேறிய குடும்பங்கள் தீவுகளிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். குடாநாட்டுக்குள் எவ்வாறு தீவுப்பகுதி தனிப் புவியியல் பண்பைக் கொண்டு விளங்குகின்றதோ அவ்வாறே தீவுகள் ஒவ்வொன்றினதும் அபிவிருத்திப் பிரச்சினைகள் தனித்தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றன.

இத்தீவுகளின் பொருளாதாரம் 1960களுக்கு முன்னர் விவசாயம். மீன்பிடி குடிசைக் கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்

பிறநாடுகளிலிருந்து உழைத்து அனுப்பும் பணமும், அரச சேவைகளிலிருந்து கிடைக்கும் பணமும் முக்கியத்துவம் அடைந்துள்ளன. விவசாயமும் மீன்பிடியும் இன்றும் பிரதான தொழில்களாக இருப்பினும் விவசாய நடவடிக்கை குறைவடைந்துகொண்டு நிச்சயமற்ற தன்மைக்குச் செல்வதையும் காணமுடிகின்றது. விவசாயத்தில் புதிய நுட்பங்கள், புதுப்பயிர்கள், நிலம் துண்டாடப்படுவது நிறுத்தப்பட்டு அவற்றினை இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிடின் தீவுப்பகுதியின் விவசாய நடவடிக்கை வருங்காலத்தில் வீழ்ச்சியுறலாம். ஆயினும் விவசாயத்தில் தங்கியிருப்போரின் எண்ணிக்கை குறைந்து வருவது நல்லதொரு போக்கெனலாம். ஏற்கனவே நயினாதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு போன்ற இடங்களில் விவசாய நடவடிக்கை மிகவும் குறைவுற்று வர்த்தக சேவைத் தொழில்களில் ஈடுபடுகின்றனர். வேலணைத் தீவு, அனலைதீவு ஆகியவற்றில் இன்றும் விவசாயம் ஓரளவு முக்கியம் பெற்றுள்ளதெனலாம்.

தீவுப்பகுதி மீன்பிடியில் பாரம்பரிய மீன்பிடிக் குடியிருப்புக்களே காணப்படுகின்றன. தீவுப்பகுதி மீனவர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியவர்களாகவும், மிகவும் பழைய தொழில் நுட்பங்களைக் கையாளுபவர்களாகவும் இருக்கின்றனர். பண்ணைப்பாலம் அமைக்கப்பட்ட பின்னர் குடாநாட்டைச் சேர்ந்த மீனவர்கள் குறிப்பாக நாவாந்துறை, கரையூர் மீனவர்கள், மண்டைதீவு அல்லைப்பிட்டிக்கு இடம் பெயர்ந்து ஈடுபடுவதுடன் குறிப்பிடத்தக்க தொகையினர் அங்கு நிரந்தரமாக வாழ்ந்தும் வருகின்றனர். புங்குடுதீவு, நெடுந்தீவு பகுதிகளுக்குப் பருவகால மீனவ

இறால் தொழிலாளர்கள் பண்ணை, புங்குடுதீவு கடற்பரப்புகளில் தினசரி தொழில் செய்கின்றனர்.

தீவுப்பகுதியின் குடிசன இயக்கத்தில் குடிவெளியேற்றம் முக்கியமான அங்கமாகவுள்ளது. 1950 - 60 ஆண்டுகளில் நெடுந்தீவு, புங்குடுதீவு மற்றும் தீவுகளில் இருந்து குறிப்பாக வருமானம் குறைந்த விவசாயக் குடும்பத்தினர் பெருநிலப்பகுதி குடியேற்றத் திட்டங்களுக்கு இடம்பெயர்ந்தனர். இதேகாலத்தில் ஊர்காவற்றுறை, கரம்பன், நாரந்தனையைச் சேர்ந்த குறிப்பாக சமூக – பொருளாதார ரீதியில் முன்னேறிய கத்தோலிக்க மக்கள் யாழ்ப்பாண நகரப் பகுதிக்கும் கொழும்புக்கும் இடம்பெயர்ந்தனர். 1970களின் பின்னர் குறிப்பாக நயினாதீவு, புங்குடுதீவு வேலணையைச் சேர்ந்த மத்திய தர குடும்பங்களும் சேவைத்தொழிலில் ஈடுபட்ட பிரிவினரும் பெரிய யாழ்ப்பாணப் பகுதிக்கு இடம் பெயர்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகவுள்ளது.

ஆரம்ப காலத்தில் தீவுப்பகுதியின் பொருளாதாரப் பின்னடைவே இடப்பெயர்வுக்குக் காரணமாக அமைந்தது. ஆனால் இப்பொழுது பொருளாதார ரீதியில் முன்னேறிய குடும்பங்களே குடிவெளியேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இந்தப் பொருளாதார ரீதியில் முன்னேறிய குடும்பங்கள் தீவுப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தில் முன்னேறாது வெளிப் பொருளாதாரத்தின் மூலமே முன்னேறியவர்களாக உள்ளனர்.

இதனால் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்ப உள்ளூர் அபிவிருத்தி ஏற்படாத காரணத்தால் இவர்கள் பின்தங்கிய கிராமிய வாழ்க்கையிலிருந்து விலகி நகர வாழ்வை நாடுகின்றனர்.

3. தீவுப்பகுதிகளில் இடஞ்சார் அபிவிருத்தியைத் துரிதப்படுத்த குடிசன மீள் பரமபல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேணடும்.

4. தீவுப்பகுதிகள் எல்லாவற்றிக்கும் பொதுவானதொரு சேவை நிலையம் விருத்தி செய்யப்பட வேண்டும்.

5. ஒவ்வொரு தீவின் குடிசனத்தொகை பொருளாதாரப் பண்பிற்குஏற்ப சேவை நிலையங்கள் விருத்திசெய்யப்படவேண்டும்.

> ஆரம்பகாலத்தில் தீவுப்பகுதியின் பொருளாதார பின்னடைவே இடப்பெயர்வுக்குக் காரணமாக அமைந்தது. ஆனால் இப்பொழுது பொருளாதார ரீதியில் முன்னேறிய குடும்பங்களே குடிவெளியேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இந்த பொருளாதார ரீதியில் முன்னேறிய குடும்பங்கள் தீவுப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தில் முன்னேறாது வெளிப் பொருளாதாரத்தின் மூலமே முன்னேறியவர்களாக உள்ளனர்.

6. வேலணைத்தீவின் கிழக்குக்கரைப் பகுதியில் புதிய குடியிருப்புகளும் நகர்களும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

7. ஊர்காவற்றுறைநகரம், புதிய முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

8. புதிய குடியிருப்புகளை அபிவிருத்தி செய்வதற்கும் போக்குவரத்து, மின்சாரம், குடிநீர்விநியோகம் போன்றவற்றின் வளர்ச்சிக்கும் புதிய பல பாதைகள் திறக்கப்பட வேண்டும்.

9. தீவுப்பகுதிகளில் காணப்படும் குறித்த சில நிலப்பகுதிகளை குறிப்பிட்ட தேவைகளுக்கு ஒதுக்கும் நிலப்பயன்பாட்டுக்கொள்கை கடைப்பிடிக்க வேண்டும்.

10. சூழல் பாதுகாப்பிற்கும் இயற்கை வனப்புக்கும் இடஞ்சார் அபிவிருத்தியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

காணப்படுகின்றது. இப்பாதை அமைப்பில் தீவு அபிவிருத்திக்கழகம் எடுத்த முயற்சிகள் வரவேற்கத்தக்கன.

இப்பாதை அமைக்கப்படுமாயின் தீவுகளுக்குப் பல நன்மைகள் கிட்டும். இது பண்ணைப் பாதைக்கு மாற்றுப்பாதையாக வருவதுடன் தீவுப்பகுதிகளையும் வலிகாமம் மேற்கு நகரங்களான சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு ஆகியவற்றுடன் நெருங்கின சமூக பொருளாதாரத் தொடர்புகளை வளர்க்கக்கூடியதான வாய்ப்புக்கள் ஏற்படும். அராலிப்பாதை வழியாக வேலணையிலிருந்து பண்டத்தரிப்புக்கு 16 கிலோ மீற்றர் தொலைவாக இருக்க வேலணையிலிருந்து யாழ்ப்பாணம் வழியாகப்பண்டத்தரிப்பின் தூரம் 27கிலோ மீற்றராக உள்ளது ஆகவே இப்பாதை அமைக்கப்படுமி த்து வலிகாமம் பகுதித் தொழிலாளர் தீவுப்பகுதிக்குச் சென்று வரும் நிலை தோன்றுவதுடன் மற்றும் நயினாதீவுக்குப்போகும் யாத்திரிகர்களின் எண்ணிக்கையும் பல மடங்காக அதிகரிக்கலாம்.

வேலணைத்தீவையும் அராலியையும் பிரிக்கும் கடற்பரப்பு ஒரு மைலுக்கு சற்று மேலாக இருப்பதுடன் ஆழமற்ற ஒரு பரவைக்கடலாக உள்ளது. இப்பாதை அமைப்பால் அராலிக் கடற்பகுதியில்

ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தத்தின்படி வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு எப்படியோ நடந்த தேர்தலில் எப்படியோ தெரிவான கூட்டுக் குழுக்களில் ஈ. பி. ஆர். எல். எவ். முதன்மை பெற்றிருந்தது.

இதனால் மாகாண முதல் அமைச்சராக வரதராஜப் பெருமாள் தெரிவாகினார். வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரை ஜனாதிபதி பிரேமதாசா பேச்சு வார்த்தைக்கு அழைத்தபோது அவர் டில்லி சென்று இந்தியப் பிரதமரையும் அமைச்சர்களையும் சந்தித்துப் பேசியதை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா மறந்திருக்க மாட்டார்.

இந்திய இராணுவம் இவ்வருடம் மார்ச் மாதத்துடன் வெளியேறிவிடும் என இந்தியா அறிவித்து வடக்கு கிழக்கிலிருந்து படிப்படியாக வெளியேறத் தொடங்கியதும் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈ.பி ஆர்.எல்.எவ். கூட்டு கட்டாயமாக உருவாக்கிய 'தமிழ்த் தேசிய இராணுவம்' தனது பலத்தைக் காட்டி ஆட்சியை நிலை நாட்ட முயற்சி செய்தது. ஆயுதபலம் இருந்தாலும் மனோபலமும் மக்கள்பலமும் இல்லாததால் அது தோல்வி அடைந்தது.

இதன்பின்னர் இந்தியப்படை வெளியேறிக் கொண்டிருந்த இடங்களிலெல்லாம் இந்தியப்படையின் பாதுகாப்புடன் வீடுகளிலும் வீதிகளிலும் மக்களைக் கொள்ளையடித்தனர். அந்த இருள் சூழ்ந்த நாட்களை ஈ. பி. ஆர். எல். எவ். மறந்துவிடலாம் அல்லது அந்தப் பழியை இதர கூட்டுக்களின் தலைமேல் சுமத்தி விடலாம். ஆனால் தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்; மறக்கவும் முடியாது.

இப்போது வடக்கிலும் கிழக்கிலும் நிலவும் சாந்தியும் சமாதானமும் நீடிக்க வேண்டுமென்பதே மக்களின் விருப்பமாகும்.

இந்திய அரசும் இந்தியப்படையும் செய்த மாபெரும் தவறை இலங்கை அரசு செய்யாதென நம்புகிறோம்.

எல்லாவற்றையும் இழந்து மக்களின் மதிப்பையும் நம்பிக்கையையுமே இழந்து முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் இருக்குமிடமே தெரியாத நிலையில் இலங்கை அரசாங்கம் ஈ. பி. ஆர். எல். எவ்வுடன் பேச்சுவார்த்தை நடத்தி என்னத்தைச் சாதித்துவிடப் போகிறது?

இப்போதுள்ள நல்ல சூழ்நிலையைக் கெடுத்து தமிழ்பேசும் மக்களுக்குள் மீண்டும் மோதலை ஏற்படுத்தித் தாம் தமது நலனைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற குள்ள நரித்தந்திரத்தை மீண்டும் பின்பற்றலாமென இலங்கை அரசு நினைக்குமானால் அது படுதோல்வியாகவே முடியும் என்பதை அழுத்திச் சொல்ல விரும்புகிறோம்.

இத்தீவுகளின் பொருளாதாரம் 1960களுக்கு முன்னர் விவசாயம். மீன்பிடி குடிசைக் கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இன்று முதனிலைத் தொழில்களில் கிடைக்கும் வருமானத்தின் முக்கியத்துவம் குறைவடைந்து வர்த்தகமும், குறிப்பிடத்தக்க தொகையினர் அங்கு நிரந்தரமாக வாழ்ந்தும் வருகின்றனர். புங்குடுதீவு, நெடுந்தீவு பகுதிகளுக்குப் பருவகால மீனவ இடப்பெயர்வுகள் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணம், நவாலி மற்றும் வலிகாமம் மேற்குப் பிரிவைச் சேர்ந்த உள்ளூர் அபிவிருத்தி ஏற்படாத காரணத்தால் இவர்கள் பின்தங்கிய கிராமிய வாழ்க்கையிலிருந்து விலகி நகர வாழ்வை நாடுகின்றனர்.

தீவுப்பகுதியின் இடஞ்சார்பு அபிவிருத்தியில் பிரதான பிரச்சினையாக இருப்பது எல்லாத்தீவுகளுககும் பொதுவானதொரு திட்டத்தைக் தயாரிப்பதும்அதில் ஒவ்வொரு தீவையும் சேர்த்துக் கொள்வதாகும். இங்கு தீவுகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக இருப்பதும்,போக்கு வரத்துப் பிரச்சினை காணப்படுவதும் நெடுந்தீவு மிகவும் தொலைவில் தனிமைப்பட்டு இருப்பதுவும் இடஞ்சார்பு அபிவிருத்திப் பிரச்சினைகளை உருவாக்குகின்றன.

இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயம் எதிர்காலத்தில் அதிகளவு பங்கை வகிக்கக் கூடியதாக இல்லை. இதனால் சேவைத்தொழில் வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயச் சார்பற்ற கிராமக் குடியிருப்புகளை அல்லது நகரக் குடியிருப்புகளை விருத்தி செய்ய வேண்டியதாகவுள்ளது. நிலப் பயன்பாட்டில் வாழிட அபிவிருத்தியும் அத்துடன் தொடர்புடைய மெய்யான தன அபிவிருத்தியிலேயே முக்கிய இடத்தைப் பெற வேண்டும்.

தீவுப்பகுதியின் இடஞ்சார்பு அபிவிருத்தியில் பின்வரும் திறமுறைகள் முக்கிய இடம் பெறல் வேண்டும்.

### இடஞ்சார்பு அபிவிருத்தி திறன்முறைகள்

1. தீவுகளின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு தீவுகளுக்கும் குடாநாட்டிற்குமிடையே போக்குவரத்துத் துறையில் அபிவிருத்தி காணப்பட வேண்டும்.

2. தீவுகளுக்குள் பொதுவாக இருந்துவரும் சமூக-பொருளாதார உறவினை மேலும் வலுப்படுத்த தீவுகளுக்கிடையிலான கடல்வழி, தரைவழிப் போக்குவரத்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

10. சூழல் பாதுகாப்பிற்கும் இயற்கை வனப்புக்கும் இடஞ்சார் அபிவிருத்தியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

### பின்தங்கிய போக்குவரத்து

தீவுப்பகுதி சமூகப் பொருளாதார ரீதியில் நீண்டகாலமாகப் பின்நின்றதற்குக் காரணம், இது குடாநாட்டுடன் போக்குவரத்துத் துறையில் கொண்டிருந்த நிலையாகும். தீவுப்பகுதியின்அபிவிருத்திக்கு இதனைக் குடாநாட்டுடன் தொடர்புபடுத்தும் போக்கு

பரப்பு ஒரு மைலுக்கு சற்று மேலாக இருப்பதுடன் ஆழமற்ற ஒரு பரவைக்கடலாக உள்ளது. இப்பாதை அமைப்பால் அராலிக் கடற்பகுதியில் மீன்வளம் குறையலாம் என்ற கருத்தை அராலி மீனவர்கள் முன்னைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், மீனவ சமூக நலன் பேணப் படக் கூடிய முறையில் இப்பாதை அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு அமைப்பதும் சிரமமல்ல.

## பொ: பாலசுந்தரம்பிள்ளை Ph. D.

வரத்துப்பாதைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதில் வேலணைத்தீவிற்கும் குடாநாட்டிற்கும் அராலித் துறை வழியாகப் பாதை நிர்மாணிக்கப் படவேண்டும். 1950ஆம் ஆண்டுகளுக்கு முன்னர், வேலணைக்கும் குடாநாட்டிற்கும் இடையேயான போக்குவரத்தில் இப்பாதை முக்கியத்துவம் பெற்றுருந்தது பண்ணைப்பால அமைப்பின் பின்னர் இதன் முக்கியத்துவம் குறைவடைந்தது.1986.1987. ஆம் ஆண்டுகளில் பண்ணைப் பாலம் தீவுப்பகுதிகளின் போக்குவரத்துக்கு மூடப்பட்டபோது தீவுப்பகுதி மக்கள் அராலித்துறை வழியாகவே யாழ்ப்பாணம் போக்குவரத்தை மேற்கொண்டனர். இக்காலப்பகுதியில் அராலிப்பகுதியில் இருந்து 300 அடி தூரமும் வேலணைப்பகுதியில் 100 அடி தூரம் அரசாலும் வேலணைப் பகுதியில் இருந்து 750 அடி தூரம் பொதுமக்களாலும் பாதை அமைக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டு யூலைக்குப் பின்னர் இப்பாதை வேலை நிறுத்தப்பட்டு இன்று கைவிடப்பட்ட நிலையில் இருப்பதுடன் அமைக்கப்பட்ட பாதையும் முழுமையாக நிறைவேற்றப்படாமையால் வானிலையால் தாக்குண்டும் சமூக விரோதிகளால் பொருட்கள் அகற்றப்படும் நிலையிலும்

### கடல்வழி தரைவழி போக்குவரத்துஅபிவிருத்தி அவசியம்

தீவுகளுக்கு இடையேயான கடல்வழி தரைவழிப் போக்குவரத்துக்களின் விருத்தியில் தான் தீவுகளின் ஒருமைப்பாடு பெருமளவில் தங்கி உள்ளது. இவ்வளர்ச்சியின் மூலம் ஏற்கனவே இருந்து வரும் சமூகப் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதுடன் மேலும் நிலைப்படுத்தலாம். இதற்குப் பின்வரும் பாதைகள் இறங்குதுறைகள் அமைப்பதில் கவனம் எடுக்கப்பட வேண்டும்.

1. மண்டைதீவு - அல்லைப்பிட்டிப் பாதை, இப்பாதை தற்போது அபிவிருத்தியடையாத நிறையில் உள்ளது. இதனை எல்லா வானிலைப் பருவங்களிலும் பெரிய வாகனங்கள் குறிப்பாகப் பேரூத்து வண்டிகள் போக்குவரத்துச் செய்யக்கூடிய பெரிய பாதையாக அமைக்க வேணடும். இப்பாதை திருத்தியமைக்கப்படின் வேலணைத்தீவையும் மண்டைதீவையும் இணைக்கவும் இவைகளுக்கூடாகப் போக்குவரத்து நடக்கவும் வழிவகுக்கும். தற்போது வேலணைக்கும்மண்டை தீவுக்குமிடையே பொதுப்போக்குவரத்து வசதிகளின்மை குறிப்பிடத்தக்கது.

(மிகுதி நாளை)

---

## மக்கள் மடல்

## தோட்டக்காணிகள் வீடுகளாக மாறுவதா?

ஆசிரியர்,
ஈழநாதம்.

கல்வியங்காட்டில் தொடங்கி புத்தூர் வரை செல்லுமஇராச பாதை வீதி இருமருங்கிலும் இருக்கும் தோட்டக்காணிகள் பல இன்று மக்கள் வதியும் குடியேற்றப் பிரதேசமாக மாறி வருவதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இம்மண் பிரதேசம் விவசாயத்துக்கு மிகவும் வளம் பொருந்தியதாகும்.எமது உணவு உற்பத்தியில் முக்கியமாக வாழை, வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, மரக்கறிபோன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு ஏற்றகாணிகள் இவையாகும். ஆனால் பலர் இவற்றை மறந்து இவ்விடங்களில் வீடுகளைக்கட்டி தோட்டச் செய்கையை குறைக்கின்றார்கள்.

மேலும் முன்பு காணி இல்லாதவர்கட்கு காணி கொடுக்கும் போர்வையில் நல்ல வளமுள்ள இக்காணிகளை குடியேற்றப்பிரதேசமாக மாற்றி எமது வளமுள்ள காணிகளை பாழடித்து விட்டனர். இப்படியாக பெறப்பட்ட காணிகள் தற்போது பலரின் கையால் மாறி வியாபார நோக்கமாக நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

இனிமேல் இப்படியான வளமுள்ள செம்மண் பிரதேச காணிகளில்வீடுகள் கட்டுவதை குறைத்து அவற்றை விவசாயத்துக்குபாவிப்பதற்கு தீர்க்கமான முடிவை நாம் எடுக்க வேண்டும். உண்மையில் காணிகள் இல்லாதவர்கட்கு குடியிருப்புக்கு போதிய அரச காணிகள்தென்மராட்சி பகுதியில் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இவற்றை இதற்கு பயன்படுத்தலாம்.

இ. கந்தையா
இராசபாதை வீதி,
கோப்பாய்.

## தபால் சேவையின் அவலம்

ஈழநாதம்
ஆசிரியர்

எமது களுவன்கேணி கிராமத்தில்அநேகமான பொருளாதாரக் குறை, வைத்திய வசதிகள், போக்குவரத்து போன்ற கஷ்டங்களுக்கு மத்தியில் கடிதப்போக்குவரத்தும் படுமோசம். சென்ற ஆறு, ஏழு மாதமாக, தபால்காரரே எமது கிராமத்திற்கு, வருவதில்லை. எமது கிராமத்திலிருந்து சில படித்த வாலிபர்கள் முறக்கட்டான்சேனை தபால் நிலையத்திற்கு சென்று எடுக்கவேண்டியிருக்கின்றது. பரீட்சைக்காக தேர்வுக்காக அனுப்பப்பட்ட கடிதங்கள் கூட கிடைக்காமல் போய்விட்டது. இதனை எவரும், கவனிப்பாரில்லை. எங்சள் கிராமத்தின் மீது ஏன் இந்த அக்கறையீனம். கவனக் குறைவா? அல்லது தேவை இல்லை என்ற எண்ணமா?

வேலாயுதம்
களுவன்கேணி.

ஈழநாதம்

# ஆசிரியர்களுக்கு ஆறுமாத சம்பள முற்பணம் வழங்கப்படவில்லை

(கொழும்பு)

ஆறு மாதச் சம்பள முற்பணம் இதுவரை ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை ஸ்ரீலங்கா முற்போக்கு ஆசிரியர் காங்கிரஸ் கல்வி உயர் கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலியின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது அசையும் அசைவற்ற ஆதனங்களை இழந்த அல்லது சேதமடைந்த அரசாங்க ஊழியர்களுக்கு இவ் முற்பணம் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்ததுஎன்றும், ஆனால் ஆசிரியர்களுக்கு ஆறுமாதச் சம்பள முற்பணம் வழங்கப்படவில்லை என்பதை ஸ்ரீலங்கா முற்போக்கு ஆசிரியர் காங்கிரஸ் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிகாட்டியுள்ளது.

அதேவேளை ஆறுமாதச் சம்பள முற்பணத்தை ஆசிரியர் நீங்கலாக சகல அரசாங்க ஊழியர்களும் பெற்று விட்டார்கள் என்று காங்கிரஸ் பத்திரிகைகளுக்கு விட்ட அறிக்கையில் காட்டியுள்ளது.

இதே வேளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆசிரியர்களுகான இடர் படியுங் வழங்கப்படவில்லை. ஸ்ரீலங்கா முற்போக்கு ஆசிரியர் சங்கத்தின் தலைவரும் பாராளமன்ற உறுப்பினருமான எம். எச். எம். அஸ்றவ் தெரிவித்தார்.

## திணைக்கள கூட்டுத்தாபன ஊழியர் தொகை மதிப்பீடு

(கொழும்புத்துறை)

சகல அரச திணைக்களக் கூட்டுத்தாபனங்கள், சபைகளின் ஊழியர் தொகை மதிப்பீடு மே மாதம் மேற்கொள்ளப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மே மாதம் நடாத்தப்படவுள்ள இவ் ஊழியர் தொகை மதிப்பீடு இலங்கையில் மேற்கொள்ளப்படும் ஆறாவது தொகை மதிப்பீடாகும்.

இத்தொகை மதிப்பு அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மாகாணசபைகளின் கீழ்வரும் சகல நிறுவனங்கள் உள்ளூராட்சி, நியதிச்சபைகள்கூட்டுத்தாபனங்கள் அரச-பிரத்தியேக கம்பனிகள் ஆகியவற்றில் உள்ள நிரந்தர தற்காலிக. அமைய ஓய்வு பெற்று மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்களையும் அடக்கும் என்றும்ஊழியர்கள் கேள்விக் கொத்தொன்றைத் தாமே பூர்த்தி செய்வதன் மூலம் தேவைப்படும் தரவுகளைக் கொடுக்க வேண்டும் என்றும்அறிவிக்கப்பட்டுள்ளது

## வட-கிழக்கு மாகாண மேலதிக நியமனங்கள் இரத்தாகும்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண சபையினால் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள நியமனங்கள் நிறுத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி பணிப்புரையின் பிரகாரம் இம்மாதம் 30திகதியுடன் முதற்கட்டமாக ஒரு பகுதியினருக்கு வேலையிலிருந்து நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தபால் அலுவலகம் சேதம் பொதுமக்கள்ஊழியர் அவதி

(சம்மாந்துறை)

கடந்தவருடம்சம்மாந்துறை பொலிசாருக்கும் தேசிய இராணுவத்தினருக்கும் ஏற்பட்ட மோதலின்போது சம்மாந்துறைத் தபால் நிலையம் மிகவும் சேதத்துக்குள்ளானது.

இத் தபாலகம் இந்திய அமைதிப்படையின் முகாமாகவும் செயற்பட்டிருந்த போது தான் இத்தபாலகம் கடுமையான சேதத்திற்குள்ளானது.

தபாலக ஊழியர்கள் தற்போது கடமைகளுக்காக அருகிலிருந்த தனியார் வீடொன்றைப் பாவிக்கின்றனர்.

இதனால் தபால் ஊழியர்களும் பொதுமக்களும் பலத்த அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்

## புனர்வாழ்வுக் கழகத்தில் 4 லட்சம் ரூபா மோசடி

(வவுனியா)

வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டோர் புனர்வாழ்வுக் கழகத்திற்குரிய கணக்கு வைப்புகளில் 4 லட்சம் ரூபாவிற்கான செலவுக் கணக்குச் சம்மந்தமாக ஆதாரம் எதுவும் இல்லை என்று இக் கழகத்தின் விசாரணைக் குழுத் தலைவர் பா. யோகநாதன் தெரிவித்துள்ளார்

இந்த நான்கு இலட்சம் ரூபா இதோடு சம்பந்த பட்டவர்களால் மோசடி செய்யபட்டிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி கழகத்திற்கான வங்கிக் கணக்குகள் எதுவும் இல்லை என்று விசாரணையின் போது தெரியவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வவுனியா

## நகரசபைக் கட்டடப்பொலிஸார் வேறொரு இடத்திற்கு மாற்றம்

(வவுனியா)

அலுவலகம் இக்கட்டடத்தின்

இலங்கையில்

## கடைசித் தமிழ் மன்னனுக்கு தமிழ்நாட்டில் மண்டபம்

(சென்னை)

இலங்கையின் கடைசி மன்னனான ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனை நினைவு கூரும் வகையில் தமிழ் நாட்டு அரசாங்கம் ஒரு ஞாபகச் சின்னத்தையும், ஒரு ஞாபகார்த்த மண்டபத்தையும் நிறுவ முடிவு செய்துள்ளது,

இதுக்கான நிதியை தமிழ் நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளதோடு, மத்திய அரசின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

தமிழ்மன்னான ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் கண்டியை ஆட்சி செய்து கொண்டிருந்த சமயம், மார்ச்மாதம் 1815-ல் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டு 1816 பெப்ரவரியில் மொறேசிஸ் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1824 வேலூரில் சிறையொன்றில் ஸ்ரீவிக்கிரமசிங்கன் காலமானார். இவரது ஈமக்கிரியைகள் நடைபெற்ற வேலூரில் இவருக்காக ஞாபகார்த்த சின்னமும், ஞாபகார்த்த மண்டபமும் அமையவுள்ளன.

ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் தமிழில் கையெழுத்திட்ட ஆவணம் ஒன்று இன்றும் கொழும்பில் தொல்பொருள் காட்சிச்சாலையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### 74ஆம் ஆண்டு

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இன்று தமிழீழத்தின் வரலாற்றில் ஒரு புதிய எழுச்சிநாள் தமிழகத்தில் இருந்துகொண்டு பதினைந்து வருடங்களாக தமிழீழத்தின் விடுதலைக்காக கானம் இசைத்துக்கொண்டிருக்கும் ஒரு எழுச்சிக்குயில் இங்கு கானம் இசைக்கப் போகின்றது, நான் அறிந்த வரையில் தமிழீழத்துக்கு வெளியே வாழும் ஒரு தமிழ்க் கவிஞன் எமது போராட்டத்தை அண்ணன் தேனிசை செல்லப்பா போன்ற பல அரச நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் நெஞ்சுறுதியோடு எடுத்துக் கூறியவர்கள் இல்லையென்றே கூறுவேன் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் தமிழினத்தின்மீதும் விடுதலை மீதும் மிகப்பற்றுக் கொண்டு எமது இயக்கத்தின்பாலும் எமது தலைவர் வே. பிரபாகரன் மீதும் தீராத பாசம் கொண்டு பல வருடங்களாக உழைத்தவரும் அண்ணன் தேனிசை செல்லப்பாவை யாழ்மாவட்டத்தில்வரவேற்று அவரது முதல் இசை நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பதில் நான் மிகவும் பெருமைகொள்கின்றேன் எமது தலைவருக்கு

15 லட்சம் வீடமைப்பு திட்டம்

## 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 இலட்சம் வீடமைப்பு திட்டம் கீழ் கிராமிய உப வீடமைப்பு கடன் பெறுபவர்கள் எதிர்வரும் மே 15 திகதி முன்பு பதிவு செய்து கொள் வேண்டும்.

இத் தகவலை தே. வீ. அ. அ. சபை மாவட்ட முகாமையாளர் திரு. கே. பத்மநாதன் தெரிவித்தார்.

கடன் பெற தனிப்பட்டவர் அல்லது நிறுவன சிபார்சுகள் தேவையில்லை பட்டியலில் பதிவு செய்யப்படும் அடிப்படையில் கடன்வழங்கப் படும்

உதவி அரச அதிபர் அலுவலகங்களிலுள்ள தே. வீ. அ. அ. சபை உத்தியோகத்தரிடம் படிவம் பெற்று 14 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும்.

வயது 18 - 50, குடும்ப வருமானம் ரூபா 700 – 2400 வரையில் இருககவேண்டும்.

தேசிய வீடமைப்பு இலாகா தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, புனர்வாழ்வு திட்டம் கீழ் வீடமைப்பு நிவாரணம் பெற்றவர்கள் இக்கடன் பெற தகுயற்றவர்கள் இவ்வாறு அவர் தெரித்தார். (37)

### யாழ் - மட்டு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் அனுப்பப்பட்டு யாழ். தபால் ரயிலில் ஒப்படைக்கப்படுகிறது.

அதேபோல யாழ்ப்பாணத்திலிருந்து இரவு தபால் ரயிலில் எடுத்துவரப்பட்டு மகோவிலிருந்து சரக்கு ரயில் மூலம் மறுநாள் நண்பகல் மட்டக்களப்பு வந்து சேருகிறது.

அன்று நண்பகலளவில் மேற்படி யாழ்ப்பாணத் தபால்கள் மட்டக்களப்பில் விநியோகம் செய்யப்படுகின்றன. (37)

### மண்ணில் வாழ்ந்து..,

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

றுடன் அந்த மண்ணுக்காக உழைக்கும் நேர்மையான தன்மையும் அவனுடன் சேர்ந்திருக்குமானால் அவனுக்கு தோல்வி என்பது இல்லை.

இவ்வாறு நேற்று முற்ற வெளி மைதானத்தில் நடைபெற்ற தேனிசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசும்போது விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கல்வி என்பது ஒரு புத்தகத்தை படிப்பதோ அல்லது ஒரு திட்டத்தை வகுப்பதோ அல்ல. எமது போராளிகள் பல்கலைக் கழகம் சென்று பெரிய படிப்பு எதுவும் படிக்கவில்லை ஆனால் எங்களுடன் நடந்த யுத்தத்தை வழி நடத்திய இந்தியர்கள் எத்தனையோ ஆண்டுகள் எங்கெல்லாமோ சென்று படித்தவர்கள், பல புத்தகங்களை எழுதியவர்கள் ஆனால் அவர்கள் எல்லாம் எங்கள்

## இளைஞர் சங்க வெள்ளிவிழா

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை இந்து இளைஞர்சங்கத்தின் வெள்ளிவிழா எதிர்வரும் 28 ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது இவ்விழாவில் சிறப்பு மலர் வெளியீடு, சால்வை வளியீடு. ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழா ஆகியன நிகழும். மற்றும் கலைநிகழ்ச்சிகளாக பட்டிமண்டபம், இன்னிசைக் கச்சேரி, வில்லுப்பாட்டு, நாட்டிய நாடகம் இன்னிசை மாலை ஆகியனவும் இடம் பெறவுள்ளன.

## இரிக்கட் சுற்றுப் போட்டி

(கல்லாறு)

கிழக்கில் 32 கழகங்கள் கலந்து கொண்ட அணிக்கு 7 பேர் கொண்ட, 6 ஓவர் மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் இரு தினங்களாக விறுவிறுப்பாக நடைபெற்றது

கலந்து கொண்ட எல்லா கழகங்களுமே விட்டுக் கொடுக்காமல் விளையாடின கல்லாறு விளையாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும், சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டும் மேற்படி கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது. (45)

## மகாபாரத விரிவுரை

(வவுனியா)

## நியமனங்கள் இரத்தாகும்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண சபையினால் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள நியமனங்கள் நிறுத்தப்பட்டு வருகின்றன.

வட-கிழக்கு மாகாணசபை ஆளுநர் லெப் ஜெனரல் நளின்செனவிரட்ன இதற்கான பணிப்புரை சகல பதில் செயலாளர்களுக்கும் விடுத்துள்ளார்.

மேற்படி பணிப்புரையின் பிரகாரம் இம்மாதம் 30திகதியுடன் முதற்கட்டமாக ஒரு பகுதியினருக்கு வேலையிலிருந்து நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 600 பேர் பல்வேறு தரங்களில் மேலதிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (37)

## சீரான சேவைகளை நடாத்த போதிய பஸ்கள் இல்லை

(வவுனியா)

வவுனியாவில் உள்ள கிராமப் பகுதிகளுக்குத் பஸ் சேவைகளை மேற்கொள்ள பஸ்கள் போதியளவு இல்லாதிருப்பதாகவவுனியா பஸ் டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த டிப்போவில் சில வருடங்களாக பஸ்கள் பற்றாக்குறை இருந்து வருவதாக தெரிவித்த அவர்' பகல் சேவைகளையே ஒழுங்காக நடாத்த முடியாத நிலையில் இருந்துவருகிறோம்.

இந்தநிலைமையில் இரவு சேவைகளை எப்படி நடாத்துவது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மேற்படி பஸ் பற்றாக்குறை சம்பந்தமாக, கல்விராஜாங்க அமைச்சர் திருமதி மனோகரி புலேந்திரனிடம் முறையிட்டதாகக் குறிப்பிட்ட அவர் பன்னிரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்த முடியாத அளவிற்கு பழுதடைந்து காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

வவுனியா நகரப் பகுதியில் இரவில் கூட மக்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணபடுகின்றது திரையரங்குகளில் இரவுக் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

இந்த நிலையில் இரவில் கிராமப் பகுதி மக்கள் நகரத்திற்கு வந்து தமது அலுவல்களை நிறைவேற்றிச் செல்வதற்கு போக்கு வரத்துக்கள் சீராக இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### இஸ்ரேல்...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள், கூட்டம் கூடிய நோக்கத்தைத் திசைதிருப்பி. ஜம்மு - காஸ்மீரில் இந்தியாவின் நிலைப்பாட்டை கண்டிக்கும் கூட்டம்போல் கூட்டத்தை மாற்றினர்.

இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கின் கொடும்பாவியையும் இந்திய தேசியக் கொடியையும் எரிக்க முயற்சித்தவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தியதாக முஸ்லிம் காங்கிரஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

பி. ப. 4 மணி வரை கூட்டம் நடைபெற்ற சமயம் பொலிஸ் வழங்கிய ஆலோசனையை ஏற்று மக்கள் கலைந்து சென்றார்களாம்.

இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடியதற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்திற்குத்தான் தாம் அனுமதி வழங்கியதாகப் புத்தளம் பொலிஸ் ஏ. எஸ். பி. தெரிவித்தார்.

கூட்டம் நடைபெற்ற சமயம் பொலிஸ் கடமையில் இருந்ததாகவும் அங்கு அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்று பொலிஸ் தரப்புப் பேச்சாளர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வவுனியா

## நகரசபைக் கட்டடப்பொலிஸார் வேறொரு இடத்திற்கு மாற்றம்

(வவுனியா)

வவுனியா பழைய நகரசபைக் கட்டடத்தில் தங்கியுள்ள பொலிஸார் இம்மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னர் வவுனியா நகரப் பகுதியில் வேறொரு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட உள்ளனர்.

இதற்கான அறிவித்தல் மேலிடத்திலிருந்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக் கட்டடத்தை மீண்டும் வவுனியா நகரசபை அலுவலகமாக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரியின் அலுவலகம் இக்கட்டடத்தின் ஒரு பகுதியில் இருக்குமென்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் நிலையத்திற்கு பொருத்தமான இடம் பார்க்கும் வேலைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. இம்மாத முடிவிற்குள் பொலிஸ் நிலையம் வேறொரு பகுதிக்கு மாற்றப்பட்டுவிடும் என்பது உறுதியாகிவிட்டது.

84ஆம் ஆண்டிற்குப் பின் இராணுவத்தினரும், அவர்கள வேறொரு பகுதிக்குச் சென்றதன்பின் பொலிஸாரும் இக்கட்டடத்தில் இருந்து வருவது தெரிந்தே. (தி)

### புலிகளை..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இனிமேல் ஒரு பொழுதிலும் எந்த ஒரு தமிழீழ அரசியல் வாதிகளையும் பாடமாட்டேன் என நேற்று தனது இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய தேனிசை செல்லப்பா அவர்கள் சூளுரைத்துள்ளார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்எனக்குகலைமாமணிப் பட்டம் வழங்காததைஇட்டு எனக்கு எதுவித கவலையும் இல்லை ஏனெனில் அந்தப் பட்டத்திலும் பார்க்க தமிழீழத் தலைவர்களால் வழங்கப்பட்ட இந்தப் புலிஇலச்சினை பொறித்த பதக்கம் மிகப்பெரும் கௌரவத்தை எனக்கு இந்த இலட்சக்கணக்கான தமிழீழ மக்கள் மத்தியில் வழங்கி உள்ளது என்றார்,

### வவுனியா,::

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டு வருவதும் தெரிந்ததே.

இச்சிற்றூழியர் தலைமறைவிற்கு வெளிநாட்டுக் கடிதங்கள் பிரிக்கப்பட்டு கிணற்றுக்குள் போடப்பட்ட சம்பவத்திற்கும் தொடர்பு இருக்கலாம் என்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார், (தி)

### பேரினவாதம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் விழிப்பாய் இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் தொடந்து பேசுகையில்-

செல்லப்பா அண்ணன் எனக்கு 81 ஆம் ஆண்டு அறிமுகமானார் தமிழகத்தில் எமக்கு அவர் நெருக்கடியான வேளைகளிலும் பேருதவியாற்றினார் தமிழீழ போராட்ட காலத்தில் எமக்காக பல பாடல்களைப்பாடி எமக்கு போராட்டத்தில் ஓர் உற்சாகத்தை வழங்கி வந்தவர் தேனிசை செல்லப்பா அவர்கள் என்று குறிப்பிட்டார்.

### மின்சார

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்களுக்கு பயிற்சி காலத்தில் விஷேட படி வழங்கப்பட உள்ளதுடன் பயிற்சி முடிந்தவுடன் சுயமாக தொழிலை மேற்கொள்ளும் வகையில் பணவசதியும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

எமது தலைவர் வே. பிரபாகரன் மீதும் தீராத பாசம் கொண்டு பல வருடங்களாக உழைத்தவரும் அண்ணன் தேனிசை செல்லப்பாவை யாழ்மாவட்டத்தில்வரவேற்று அவரது முதல் இசை நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பதில் நான் மிகவும் பெருமைகொள்கின்றேன் எமது தலைவருக்கு மிகவும் பிடித்தமான 'நம்புங்கள் தமிழீழம்நாளைபிறக்கும்' என்ற இசைப்பாட்டில் இருந்து கணக்கற்ற பாடல்களைப் பாடிய தேனிசை செல்லப்பா அவர்களின் இன்னிசை மழையில் நீங்கள் நனைய இருக்கின்றீர்கள் என்றும் தெரிவித்தார்.

மேலும் எமக்காக பாடல்களைப் பாடிய காரணத்துக்காக தமிழக உளவுப் பிரிவாலும், பொலிசாராலும் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டு இன்னலுக்கு உள்ளானவர் அப்போது கூட என் வாய் இயங்கும்வரை தமிழீழ விடுதலைக்காக பாடிக்கொண்டே இருப்பேன் என்று கூறிவிட்டு தனது புனிதப் பணியை இன்றுவரை தொடர்கின்ற இவருக்கு எமது மண் நிறைய கடமைப்பட்டிருக்கின்றது எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் தளபதி திரு. கிட்டு அவர்களை சென்னையில் வீட்டுக்காவலில் வைத்திருந்தபோது அவரை சந்திப்பதற்கு பல தலைவர்கள் அங்கு தயக்கம் காட்டிய போதிலும் இரகசிய பொலிசாரின் கட்டுக்காவலை மீறி துணிவுடன் சென்று பேசி வந்தவர் இவர் அப்பொழுது நீ ஏன் இவரைப் பார்க்கச் சென்றாய் என்று பொலிசார் வினாவியபோது ஒரு வீரத் தமிழ் தளபதியை ஒரு தமிழ் கலைஞன் சந்திக்க விரும்புகின்றேன் என்று கூறிய வாய் இவருடைய வாய் நான் மரணிக்கும்போது தமிழீழ விடுதலைப்புலிகள் உலாவரும் இந்த மண்ணில் என் உடலைப் புதையுங்கள் என்று கூறுகின்ற பாசம் இவருடைய பாசம் எனவும் குறிப்பிட்டார்

இறுதியாக திலீபனின் இலட்சியத்துக்கு மிக சொற்ப தூரத்தில் நாம் நிற்கின்றோம் விரைவில் திலீபனின் இலட்சியம் ஈடேறும் எனக்கூறி தேனிசை செல்லப்பா அவர்களின் தேனிசை நிகழ்ச்சியை தொடக்கி வைக்கின்றேன் எனக் கூறினார்.

எமது போராளிகள் பல்கலைக்கழகம் சென்று பெரிய படிப்பு எதுவும் படிக்கவில்லை ஆனால் எங்களுடன் நடந்த யுத்தத்தை வழிநடத்திய இந்தியர்கள் எத்தனையோ ஆண்டுகள் எங்கெல்லாமோ சென்று படித்தவர்கள், பல புத்தகங்களை எழுதியவர்கள் ஆனால் அவர்கள் எல்லாம் எங்கள் போராளிகளுடன் போராடி வெற்றிகாண முடியவில்லை என்றார்.

### ஹமீத்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மாவட்ட முஸ்லிம்களின் கருத்துக்களை திரட்டுவதற்காகவே இம்மாத இறுதியில் வருகை தருகிறார். (37)

### பல்லாண்டுகளின்...

(1ஆம் பக்கத தொடர்ச்சி)

யாழ். முற்றவெளிக்குச் செல்லும் வீதிகளெல்லாம் மக்கள் கூட்டமாகவே காணப்பட்டனர். 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ். வீரசிங்க மண்டபத்துக்கு முன்பாக திரண்டு கொண்டிருந்த மக்கள் வெள்ளத்துக்குப் பன்மடங்கு அதிகமாகப் பலஆண்டுகளின்பின் யாழ். முற்றவெளி மைதானம் லட்சோபலட்சம் மக்களால் நிறைந்திருந்தது.

இலங்கை இராணுவமும் பின்னர் இந்திய இராணுவமும் கோட்டையில் தங்கள் பாதுகாப்புக்காக மின்னொளிபரப்பி முற்றவெளி மைதானத்தையும் அதை நோக்கி வரும் வீதிகளையும் இருள் சூழ வைத்திருந்தனர். கோட்டை மதில் சுவர்களில் பராசெய்து வந்த இந்திய இராணுவம் வீதிகளில் எந்த வாகனமாவது வருகிறதா என்று கண்வைத்திருந்த காலம்போய் கோட்டைமதில் சுவர்மீது இலங்கைப் பொலிசார் சிலர் நின்று தேனிசை நிகழ்ச்சியையும் இதில்கலந்து கொள்ள வந்திருந்த மக்கள் வெள்ளத்தையும் இவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக ஆயுதம் ஏந்தி எந்த நிலையையும் எதிர் நோக்கத்தயார் என்று நின்ற விடுதலைப் புலிப்படையினரையும் பெண்புலிகளையும் வைத்த கண் எடுக்காது பார்த்துக் கொண்டிருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது கோட்டைச் சுவரிலிருந்து இலங்கைப் பொலிசார் இந்தக் கண்கொள்ளாக் காட்சியைப் புகைப்படங்களும் எடுத்தனர்,

சாரிசாரியாக முற்றவெளி மைதானத்தை நோக்கி மக்கள் வெள்ளம் சொரிந்து கொண்டிருந்ததால் தேனிசை நிகழ்ச்சி திட்டமிட்டபடி மாலை ஐந்து மணிக்குத் தொடங்க முடியாமல் சற்று நேரம் கழித்தே ஆரம்பமானது.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் நிகழ்ச்சிக்குத்தலைமை வகிக்க யாழ். மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் திரு. பானு குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து உரை நிகழ்த்தினார்.

சில மாதங்களுக்கு முன் மாலை ஆறுமணிக்கே கதவுகளைப் பூட்டிக் கொண்டு மூச்சுவிடக்கூடப்பயந்து ஒளிந்திருந்தமக்கள், உறவினர் வீட்டில் நடந்த நன்மைதீமைகளுக்குப் போனாலும் வீட்டில் கொள்ளை போய்விடுமே என்று அஞ்சிப்பதுங்கியிருந்த மக்கள் நேற்று கொள்ளையடிப்பதற்கு இங்கு இப்போது யாரும் இல்லை என்ற துணிச்சலுடன் தேனிசை நிகழ்ச்சி மனதைக் கொள்ளைகொண்டு நள்ளிரவுவரை யாழ். முற்றவெளிமைதானத்தில் திரண்டு கொண்டிருந்த காட்சி அற்புதக் காட்சியென்றே சொல்ல வேண்டும்.

ஒழுங்கு செய்யப்பட்டது. (45)

## மகாபாரத விரிவுரை

(வவுனியா)

வவுனியா ஸ்ரீசிந்தாமணி ஆலயத்தில் மகா பாரதம் பற்றியவிரிவுரைகள்நடைபெற்று வருகிறது.

திரு அகளங்கன் அவர்களினால், கடந்த 14ஆம் திகதி முதல் தினமும்மாலை வேளைகளில் இது நடைபெற்றுவருகிறது. (தி)